பக்கங்கள்: 13

# காலைக்கதிர்

Kālaikathir

விடியல் 03 வள்ளுவர் ஆண்டு 2050 புரட்டாதி 03 வெள்ளிக்கிழமை 20.09.2019 கதிர் 319

## இனி இது ரகசியம் அல்ல!

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிக்கும் ஓர் அரசியல் காய் நகர்த்தல் திட்டத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன – பிரதமர் ரணில் விக்கிரமசிங்க – ஜே.வி.பி. – தமிழ்த் தேசியக் கூட்

பக்கம் 02 »

# ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்பு முயற்சிக்கு சஜித் அணி ஆப்பு!

## நேற்று விசேட அமைச்சரவைக் கூட்டத்தில் ரணில் தரப்புக்கு எதிராக ரணகளப் பாய்ச்சல்

கொழும்பு, செப்ரெம்பர் 20

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமையை ஒழிக்கும் விதத்திலான அரசமைப்பின் 20ஆவது திருத்தத்தை ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் நிறைவேற்றி நடைமுறைக்குக் கொண்டு வரும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தரப்பின் முயற்சியை நேற்று நடைபெற்ற விசேட அமைச்சரவைக் கூட்டத்திலும், அதற்கு முந்திய ஐ.தே.முன்னணியின் உள்ளகக் கூட்டத்திலும் தீவிரமாக எதிர்த்து, கூட்டத்தை ரணகளப்படுத்தி, அந்த முயற்சியை அடியோடு குழப்பியது கட்சியின் பிரதித் தலைவரும் அமைச்சருமான சஜித் பிரேமதாஸா தலைமையிலான அணி.

பக்கம் 03 »

## வேட்புமனுத் தாக்கலுக்கு 2 மணி நேரமே அவகாசம்

கொழும்பு, செப். 20

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் கட்சிகள், சுயேச்சை வேட்பாளர்கள் நேற்றுத் தொடக்கம் கட்டுப்பணத்தைச் செலுத்த முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பக்கம் 03 »



## நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறையை நீக்குவதற்கு ஒருபோதுமே இடமளியோம்!

### மைத்திரி – ரணில் கூட்டு முயற்சியை தோற்கடிப்போம் என விமல் சூளுரை!

கொழும்பு, செப். 20

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்குவதற்கு ஒருபோதும் இடமளிக்கமாட்டோம்.–என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரான விமல் வீரவன்ஸ

பக்கம் 03 »

## நிறைவேற்று அதிகாரத்தை ஒழிக்க சஜித் தரப்பு அமைச்சர்கள் எதிர்ப்பு!



கொழும்பு, செப். 20

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதற்கு ஜனாதிபதியும் பிரதமரும் அவசர அவசரமாக எடுத்துவரும் முயற்சிகளுக்கு சஜித் ஆதரவு அமைச்சர்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

தற்போது ஜனாதிபதி மைத்திரிபால தலைமையில் நடைபெற்றுவரும் அமைச்சரவைக் கூட்டத்துக்கு

பக்கம் 03 »

## மஹிந்த - மைத்திரி பேச்சும் தோல்வி!

### கூட்டணி அமைப்பு தொடர்பில்



கொழும்பு, செப். 20

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவும் நேற்று முன்தினம் இரவு சந்தித்து நடத்திய பேச்சு தோல்வியில் முடிந்துள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

பக்கம் 02 »

## மூன்று வேட்பாளர்கள் நேற்று கட்டுப்பணத்தை செலுத்தினர்

கொழும்பு, செப். 20

எதிர்வரும் நவம்பர் மாதம் 16ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்காக மூன்று வேட்பாளர்கள்

பக்கம் 02 »



## சந்தர்ப்பவாதமும் சுயநலமும் உச்சம் வாக்குறுதியை கைவிடும் நல்லாட்சி!

### சுமந்திரன் எம்.பி. கடுமையாகச் சாடல்

கொழும்பு, செப். 20

நிறைவேற்று அதிகார முறைமையை ஒழிப்பதற்கான நடவடிக்கைகளை எதிர்க்கும் நல்லாட்சியாளர்கள் குறித்து கவலைப்படுகின்றோம். சந்தர்ப்பவாதமும் சுயநலமும் உச்சத்தை எட்டி கால்நூற்

பக்கம் 03 »

## மனித உரிமைப் பாதுகாவலர்களுக்கு இலங்கையில் தொடரும் அச்சுறுத்தல்!

### ஐ.நா. செயலாளர் நாயகம் கவலை

ஜெனீவா, செப். 20

இலங்கையின் மனித உரிமைப் பணியாளர்கள், செயற்பாட்டாளர்கள் துன்புறுத்

பக்கம் 03 »



## சஜித்துக்கு சு.க. பச்சைக்கொடி!

கொழும்பு, செப். 20

ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து சஜித் பிரேமதாஸ வெளியேறி பொது வேட்பாளராகக் களமிறங்கினால், அவருடன் பேச்சு நடத்த

பக்கம் 03 »

## முன்னாள் படைத் தளபதிகளுக்கு நேற்று உயர் கௌரவப் பதவிகள்



கொழும்பு, செப். 20

முன்னாள் கடற்படை மற்றும் விமானப்படைத் தளபதிகளுக்கு, ஜனாதிபதி

பக்கம் 03 »

## இராணுவத் தளபதி இன்று யாழ்ப்பாணம் வருகிறார்

யாழ்ப்பாணம், செப். 20

இலங்கை இராணுவத்தின் புதிய தளபதி லெப்.ஜெனரல் சவேந்திர சில்வா, முதன்முறையாக

பக்கம் 03 »

## ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்குகிறார் மகேஷ்?

கொழும்பு, செப். 20

ஜனாதிபதித் தேர்தலில் முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் மகேஷ் சேனநாயக்கவை வேட்பாளராகக் களமிறக்குவதற்கு திட்டமிட்டுள்ளதாக தேசிய மக்கள் இயக்கம் தெரிவித்துள்ளது.

நாட்டுக்குத் தலைமைத்துவம் வழங்கக் கூடிய ஒரு வேட்பாளர்

பக்கம் 03 »



# ஐ.தே.மு. கட்சித் தலைவர்களின் கூட்டத்திலும் முடிவேதுமில்லை

கொழும்பு, செப். 20

ஐக்கிய தேசிய முன்னணி கட்சித் தலைவர்கள் கூட்டமும் நேற்று முடிவில்லாமல் முடிவடைந்துள்ளது.

ஜனாதிபதி வேட்பாளர், நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறை ஒழிப்பு தொடர்பாக இதில் ஆராயப்பட்டபோதும், எந்த விடயத்திலும் இறுதி முடிவு எட்டப்படவில்லை.

பிரதமர் ரணில் தலைமையில் அலரி மாளிகையில் நடந்த இந்தக் கூட்டத்தில் பெரும்பாலான கட்சித் தலைவர்கள் கலந்து கொள்ளவில்லை. இதனால் இன்று மீண்டும் கூடுவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதற்கான யோசனை குறித்து நேற்றைய கூட்டத்தில் பேசப்பட்டுள்ளது. (ஐ)

# சீன கம்யூனிஸ்ட் உறுப்பினரை சந்தித்தார் ஜனாதிபதி மைத்திரி

இலங்கைக்குச் சுற்றுப் பயணம் ஒன்றை மேற்கொண்டுள்ள சீன கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழு உறுப்பினரான சென் மைனருக்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்குமிடையிலான சந்திப்பு ஜனாதிபதி செயலகத்தில் நேற்று இடம்பெற்றது.

இரு நாட்டுத் தொடர்புகள் மற்றும் பிராந்தியத்தின் ஸ்திரத்தன்மை தொடர்பில் இதில் தீர்க்கமாகக் கலந்துரையாடப்பட்டது.

60 ஆண்டுகாலமாகச் சீனாவினால் இலங்கைக்கு வழங்கப்பட்டுவரும் உதவிகளுக்கு நன்றி தெரிவித்த ஜனாதிபதி , யுத்த காலத்தில் சீனா இலங்கைக்கு வழங்கிய ஒத்துழைப்பை இலங்கை ஒருபோதும் மறவாது என்றும் தெரிவித்தார்.


ஆதிகாலம் முதல் சீனாவுக்கும் இலங்கைக்குமிடையிலான நெருங்கிய தொடர்புகளை நினைவூட்டிய சென் மைனர், இரு நாடுகளுக்குமிடையே தூதரகத் தொடர்புகள் ஆரம்பிப்பதற்கு முன்னர், அதாவது 1950 அளவில் இறப்பர் மற்றும் அரிசி ஒப்பந்தத்தை ஏற்படுத்திக்கொண்டதன் ஊடாகச் சிறந்த நட்பு நாடு என்ற வகையில் இலங்கை சீனாவுக்குச் சர்வதேச அங்கீகாரத்தை வழங்கியுள்ளதாகவும் தெரிவித்தார்.

மேலும் இலங்கையில் ஒரே சீனா கொள்கையினூடாக தனது நாட்டுக்குச் சர்வதேச ரீதியில் வழங்கப்பட்ட ஒத்துழைப்பையும் அவர் நினைவு கூர்ந்தார்.

சீன கம்யூனிஸ்ட் கட்சியின் அடுத்த ஆண்டு விழாவில் கலந்துகொள்ளுமாறு ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பிரதிநிதிகள் குழுவிற்கு சென் மைனர் அழைப்பு விடுத்தார்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உப தலைவர் நிமல் சிறிபால டி சில்வா, பேராசிரியர் ரோஹன லக்ஸ்மன் பியதாச, மஹிந்த அமரவீர, திலங்க சுமதிபால மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் உதய ஆர். செனெவிரத்ன, இலங்கைக்கான சீனத் தூதுவர் உள்ளிட்ட பிரதிநிதிகள் குழுவினர் இச் சந்திப்பில் கலந்துகொண்டனர். (ஐ)

# பேராசிரியர் பொன்.பூலோகசிங்கம் சிட்னி நகரில் நேற்றுக் காலமானார்



சிட்னி,செப்.20

பேராசிரியர் பொன்.பூலோகசிங்கம் நேற்று சிட்னியில் காலமானார். அவருக்கு வயது 83.

வவுனியாவில் செட்டிகுளத்தைச் சேர்ந்த பொன்னையா உடையார் பூலோகசிங்கம் தமது ஆரம்பக் கல்வியை செட்டிகுளம் அரசினர் தமிழ் வித்தியாலயத்திலும் இடைநிலைக் கல்வியை யாழ்ப்பாணம் சம்பத்திரிசியார் கல்லூரியிலும் கற்று சித்திபெற்று அங்கிருந்து பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெற்றார். 1961 ஆம் ஆண்டு அங்கு தமிழில் முதலாம் வகுப்புச் சித்தியைப் பெற்றார். பேராசிரியர்கள் வி. செல்வநாயகம், ஆ. சதாசிவம், ச. தனஞ்சயராசசிங்கம், சு. வித்தியானந்தன் ஆகியோரின் மாணவர் இவர். இலங்கை அரசாங்கப் பல்கலைக்கழகப் புலமைப்பரிசில் பெற்று 1963 முதல் 1965 வரை ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் திராவிட மொழியியலறிஞர் பேராசியர் தோமஸ் பரோவின் கீழ் மொழியியல் ஆராய்ச்சி மேற்கொண்டு கலாநிதிப் பட்டம் பெற்றார். வவுனியாவில் முதலாவதாக கலாநிதிப் பட்டத்தைப் பெற்றுக் கொண்டவரும் இவரே என்பது சிறப்புக்குரியது.

இலங்கைப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக 1965 இல் சேர்ந்து, கொழும்புப் பல்கலைக்கழகம், களனி பல்கலைக்கழகம், பேராதனைப் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் 1997 வரை பேராசிரியராகப் பணிபுரிந்தார். 1997 ஆம் ஆண்டு தனது பேராசியர் பதவியை விட்டு விலகி புலம்பெயர்ந்து ஆஸ்திரேலியா சென்று சிட்னி நகரில் வசித்து வந்தார்.

ஆணல்ட் சதாசிவம்பிள்ளையின் பாவலர் சரித்திர தீபகத்தினை (1886) அரிய ஆராய்ச்சிக் குறிப்புகளுடன் எழுதி முதலிரு பாகங்களையும் 1975 இலும் 1979 இலும் வெளியிட்டுள்ளார். கொழும்புத் தமிழ்ச்சங்கம் இந்த இரண்டு நூல்களையும் வெளியிட்டது. ஆங்கிலக் கவிஞர் தம்பிமுத்து பற்றித் தமிழிலும் ஆங்கிலத்திலும் இவர் எழுதிய கட்டுரைகள் நூலுருவாகியுள்ளன. இவற்றைவிட நான்காம் உலகத்தமிழாராய்ச்சி மாநாட்டை இலங்கையில் நடத்துவதில் முன்னின்று உழைத்த தமிழறிஞர்களில் இவரும் ஒருவராவார்.

“புலமைப் பாரம்பரியத்தின் உன்னத அடையாளம் பேராசிரியர் பொன். பூலோகசிங்கம்” – என்று யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் என். சண்முகலிங்கன் தனது அஞ்சலிக் குறிப்பில் அன்னாருக்குப் புகழாரம் சூட்டியுள்ளார்.

## மஹிந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையில் கூட்டணி அமைப்பது குறித்தே இந்தச் சந்திப்பின்போது கலந்துரையாடப்பட்டது. எனினும் இந்தப் பேச்சு வெற்றியளிக்கவில்லை என்று கூறப்படுகிறது.

பொதுஜன பெரமுனவின் சின்னத்தில் போட்டியிடும் கோட்டாபய ராஜபக்ஷவை ஆதரிக்க வேண்டும் என்று மஹிந்த ராஜபக்ஷ விடுத்த கோரிக்கையை, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நிராகரித்துவிட்டார் என்றும் தகவல்கள் கூறுகின்றன.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன வின் மொட்டுச் சின்னத்துடன் எந்த வகையிலும் இணங்கிச் செயற்பட முடியாது என்றும் ஜனாதிபதி திட்டவட்டமாகக் கூறியுள்ளார்.

அதேவேளை, பொதுஜன பெரமுனவுடன் நடத்தப்படும் பேச்சு வெற்றியடையாது போனால், சுதந்திரக் கட்சி சார்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவார் என நேற்று முன்தினம் அந்தக் கட்சியின் முக்கிய தலைவர்களில் ஒருவரான மஹிந்த அமரவீர தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## மூன்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர்.

இலங்கை சோஷலிசக் கட்சியின் அஜந்த பெரேரா மற்றும் இரு சுயேச்சை வேட்பாளர்களான முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயந்த கோத்தாகொட மற்றும் எஸ்.அமரசிங்க ஆகியோரே நேற்றுக் கட்டுப்பணத்தைச் செலுத்தியுள்ளனர். (ஐ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டமைப்பு ஆசிய தரப்புகள் சத்தம் சந்தடியின்றி ஈடுபட்டிருக்கின்றன என்ற தகவலை விலாவாரியான விவரங்களோடு நேற்றும் முன் தினமும் எனது இப்பத்தியில் விவரித்திருந்தேன்.

அதற்கு இரண்டொரு தினங்களுக்கு முன்னர் 'காலைக்கதிர்' ஆசிரிய தலையங்கத்திலும் அது பற்றிய விடயங்கள் இடம்பெற்றிருந்தன.

ஆனால் கொழும்பிலிருந்து வெளியாகும் மும்மொழித் தேசிய நாளிதழ்கள் உட்பட எவையும் இது குறித்து நேற்றுவரை மூச்சுக் கூட விடவில்லை. எமது இத் தகவல்களைக் கற்பனைச் செய்தி என்று விமர்சித்த ஊடகப் பிரகிருதிகளும் உண்டு.

ஆனால், இந்த விடயத்துக்காக விசேட அமைச்சரவைக் கூட்டம் எந்நேரமும் கூட்டப்படலாம் என நேற்று முன்தினம் காலையில் நான் இப்பத்தியில் கூறியபடி, நேற்றுப் பிற்பகல் விசேட அமைச்சரவைதிடீர்வெனக் கூடியபோதுதான் கொழும்பு ஊடகங்கள் கூட விழித்துக்கொண்டு அடித்துப் பிடித்து இது பற்றிய தகவல்களைத் தேடத் தொடங்கின.

*“ஜனாதிபதி மைத்திரி வீட்டில் அரசமைப்புப் பிரதியுடன் ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் ஜனாதிபதியைச் சந்திக்கக் காத்திருந்தார் என்ற தகவலை நீங்கள் முதன் முதலில் போட்டுடைத்த போது கொழும்பில் பலரும் அதனை நம்பவில்லை. ஒரு வாரம் கழித்து உங்கள் பெயரைக் குறிப்பிடாது கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று அந்தச் செய்தியைத் தனது பெருவரவேற்புப் பெற்ற அரசியல் பத்தியில் உறுதிப்படுத்தி வெளிப்படுத்திய போதுதான் உங்கள் தேடலின் உண்மைத் தன்மையை ஊடக நண்பர்கள் பலரும் மன தளவில் ஒப்புக் கொண்டனர். இப்போதும் கூட நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிக்கும் ரணில் தரப்பின் கடைசி நேர முயற்சி பற்றிய உங்களின் தகவல்கள் கடந்த மூன்று, நான்கு நாள்களாக விலாவாரியாக – 'எக்ஸ்குளூசிவ்வாக' வெளிவந்தன. நாங்கள் தினசரி உங்கள் பத்தியின் விவரங்களை மொழி பெயர்த்துப் பெற்று ஆச்சரியப்படுவதுண்டு. அது எப்படி யாழ்ப்பாணத்தில் இருந்து கொண்டு கொழும்பு உள்வீட்டுத் தகவல்களை அப்படிக் கனகச்சிதமாகப் பெற்றுக்கொள்ள உங்களால் முடிகின்றது?”* – என்று நேற்றிரவு தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசிய மூத்த ஆங்கில அரசியல் விமர்சகர் ஒருவர் குறிப்பிட்டார். அவரது பெயரைக் குறிப்பிடுவதை அவர் விரும்புவாரோ தெரியவில்லை. அதனால் விட்டு விட்டேன்.

தென்னிலங்கையின் சில மூத்த அரசியல் தலைவர்களின் பெயர்களைக் குறிப்பிட்டு, அவர்கள் தொடர்பான செய்திகளை Cross Check பண்ண நாம் யாழ்ப்பாணத்தில் இருக்கும் உங்களுடன் அல்லவா தொடர்பு கொள்ள வேண்டி இருக்கின்றது என்றும் அவர் சொன்னார்.

அந்த மூத்த ஆங்கில ஊடகவியலாளரின் அந்த வாழ்த்தை காலைக்கதிருக்கும் அதனை ஊக்குவித்து நிற்கும் வாசகர்களுக்குமான பாராட்டும் கௌரவமுமாக நினைக்கிறேன்.

இப்போது முன்னெடுக்கப்பட்ட அரசமைப்புத் திருத்த முயற்சி பற்றிய செய்திகளை எமது 'காலைக்கதிர்' மட்டுமே முற்கூட்டியே வெளியிட்டது என்பது நமக்கும் நமது வாசகர்களுக்கும் பெருமையே.

அது மட்டுமல்ல, ஜனாதிபதித் தேர்தல் நவம்பர் 16 இல் நடக்கும், வேட்பு மனுக்கள் ஒக்ரோபர் 7ஆம் திகதி ஏற்றுக் கொள்ளப்படும் என்ற செய்தியை இலங்கையில் மற்றெல்லாப் பத்திரிகைகளையும் முந்திக் கொண்டு கடந்த செவ்வாய் காலையே கனகச்சிதமான விவரங்களோடு வெளியிட்ட ஒரே பத்திரிகையும் உங்கள் 'காலைக் கதிர்' மட்டும்தான்.

இனி, இன்றைய விடயத்துக்கு வருவோம்.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிக்கும் பிரதமர் ரணில் தலைமையிலான குழுவினர் அவசர அவசரமாக எடுத்திருக்கும் கடைசி நேர முயற்சி மூன்று கண்டங்களைத் தாண்ட வேண்டும் என்று இப்பத்தியில் குறிப்பிட்டிருந்தேன்.

முதலாவது – அமைச்சரவையில் அது அங்கீகரிக்கப்பட வேண்டும்.

இரண்டாவது – நாடாளுமன்றத்தில் அதற்கு மூன்றில் இரண்டு பங்கு ஆதரவு கிட்ட வேண்டும்.

மூன்றாவது – சர்வஜன வாக்கெடுப்பில் அது மக்களால் அங்கீகரிக்கப்பட வேண்டும்.

இந்த அவசர முயற்சி பற்றிய நடவடிக்கைகள் இந்த வாரத்துக்குள் முழு மூச்சில் ஆரம்பிக்கப்பட்டாக வேண்டும் என்றும் குறிப்பிட்டிருந்தேன்.

இதற்காக விசேட அமைச்சரவைக் கூட்டம் எந்நேரமும் நடக்கும் என்றேன். அது நேற்றுக் காலை தீர்மானிக்கப்பட்டு நேற்றுப் பிற்பகல் நடந்தது.

அந்தோ பாவம்! முதலாவது கண்டத்திலேயே அந்த முயற்சி அடிபட்டுப் படுத்துவிட்டது. இனி அந்த முயற்சி தொடராது. அது முடிந்த கதையாகி விட்டது.

இந்த முயற்சிக்கு ஆதரவளிக்கலாம் என்று நேற்று முன்தினம் சுமந்திரனிடம் உறுதி கூறிய அமைச்சர் மனோ கணேசன் நேற்று விசேட அமைச்சரவைக்கு முந்திய கூட்டத்தில் திடீர் அந்தர் பல்டி அடித்து அந்த முயற்சியை எதிர்த்து நின்றமை எதிர்பாராத திருப்பம்.

ரணிலைப் பழிவாங்கி அவரைச் சிக்கலில் போடுவதற்காக இந்த விடயத்தில் ரணிலின் முயற்சியை எதிர்த்து நின்ற சஜித் தரப்பின் போக்கு ஐ.தே.கவைப் பொறுத்தவரைத் துரதிர்ஷ்டம் தான்.

இந்த விடயத்தில் சஜித் தரப்பின் போக்கைப் பெயர் குறிப்பிடாமல் சுமந்திரன் வைதிருக்கின்றார். ஐ.தே.க. வேட்பாளராகவோ அல்லது வேறுதரப்பின் வேட்பாளராகவோ இந்த ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸா குதிப்பாராயின் அவர் தேர்தலில் கூட்டமைப்பின் பிரதிபலிப்பு எப்படி அமையும் என்பதற்கான கட்டியமாக இதனை நான் பார்க்கிறேன். சஜித்தைத் தலையில் வைத்துக் கூத்தாடும் தரப்புகள் இதனைக் கவனத்தில் எடுத்தால் நல்லது.

ஐ.தே.கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர்களுக்கான தெரிவில் கட்சியின் நிறைவேற்றுக் குழுவில் சஜித்துடன் நேரடியாகப் போட்டியிட்டு அவரைத் தோற்கடிப்பது என்பதில் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மிக உறுதியாக இருக்கின்றார் என்கின்றன அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள்.

அப்படிப் போட்டியிட்டு சஜித்தைத் தோற்கடித்து, அதனைத் தாம் பெற்றுக் கொண்ட பின்னர், ஒரு சமரச ஏற்பாடாக நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை அடுத்த ஒரு வருட காலத்தில் ஒழிப்பார் என்ற நிபந்தனை உறுதிமொழியின் அடிப்படையில் அந்த வேட்பாளர் வாய்ப்பை கரு ஜயசூரியாவுக்குத் தாரை வார்ப்பதற்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தயாராக இருக்கின்றார் என்றும் கூறப்படுகின்றது.

கரு ஜயசூரியவை ஐ.தே.க. சார்பில் பொது வேட்பாளராக இறக்குவதன் மூலம் ஜே.வி.பி., தமிழ்க் கூட்டமைப்பு போன்றவற்றின் முழு ஆதரவையும் அவருக்குப் பெற்றுக் கொடுக்க முடியும் என்றும் ரணில் நம்புகின்றாராம்.

எது, எப்படி என்றாலும் இவ் விடயங்களில் முடிவுகள், தீர்மானங்கள் எடுப்பதற்கு இனிக் காலம் மிகக் குறுகியது என்பது தான் முக்கிய விடயம்.

அடுத்த கிழமைக்குள் எல்லாம் தீர்மானிக்கப்பட்டு விட வேண்டும். ஆகவே அடுத்து வரும் நாள்களில் பல விடயங்கள் அவசர கதியில் கட்டவிழும் என எதிர்பார்க்கலாம்.

- மின்னல் -

## நிறைவேற்று அதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னர் அலரி மாளிகையில் பிரதமர்தலைமையில்கூட்டமொன்று நடந்தது.

இதில் கலந்துகொண்ட சஜித் ஆதரவு அமைச்சர்கள் ,இந்த முயற்சிக்கு கண்டனத்தை வெளியிட்டுள்ளனர்.

நிறைவேற்று அதிகாரத்தை இரத்துச் செய்யும் எந்தவொரு முயற்சிகளும் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் முடிந்த பின்னரே செய்யப்படவேண்டுமென அவர்கள் பிரதமரிடம் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அமைச்சர்கள் சம்பிக்க, ரவூப் ஹக்கீம் ,ஹரீன் பெர்னாண்டோ உட்பட்ட பல அமைச்சர்கள் இதே நிலைப்பாட்டை கொண்டுள்ளனர் எனத் தெரிகிறது.

இவ்வளவு காலமும் இதனைச் செய்யாமல் – ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் இவ்வாறு செய்வது மக்கள் மத்தியிலும் அதிருப்தியை உண்டுபண்ணுமென அமைச்சர்கள் பிரதமரிடம் சுட்டிக்காட்டினர்.

அமைச்சர் மங்களவுக்கும் பிரதமர் ரணிலுக்குமிடையில் இந்த கூட்டத்தில் கடும் வாதப் பிரதிவாதங்கள் ஏற்பட்டன எனவும் அறியமுடிந்தது. (ஐ)

## இராணுவத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணத்துக்கு இன்று வருகை தருகிறார்.

யாழ்ப்பாணத்துக்கு வருகை தரும் அவர் காலை நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் வழிபாடுகளில் ஈடுபடுகிறார்.

தொடர்ந்து வடக்கு மாகாண ஆளுநர், யாழ். மறைமாவட்டக் குரு முதல்வர் , யாழ். மாவட்ட அரச அதிபர் ஆகியோரை இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சவேந்திர சில்வா சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

பலாலி உயர் பாதுகாப்பு வலயப் பகுதிகளையும் அவர் பார்வையிட உள்ளார்.

இலங்கை இராணுவத்தின் புதிய தளபதியாக லெப்.ஜெனரல் சவேந்திர சில்வா கடந்த மாதம் நியமிக்கப்பட்டபோது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட தமிழ்க் கட்சிகள், ஐ.நா பொதுச் செயலாளர், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர், சர்வதேச நாடுகள் மற்றும் பொது அமைப்புக்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டிருந்தன.

இந்த நிலையில் அவர் யாழ்ப்பாணத்துக்கு இன்று வருகை தருகின்றார். (ஐ)

## ஜனாதிபதி வேட்பா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்தும், அரசியல்வாதி அல்லாத ஒரு வேட்பாளரை நிறுத்துவதன் நன்மை, தீமைகள் குறித்தும் தேசிய மக்கள் இயக்கம் விரிவான கலந்துரையாடல்களை நடத்தியுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவது குறித்து ஜெனரல் மகேஷ் சேனநாயக்கவிடம் கேட்டபோது, அவ்வாறான முடிவைத் தான் எடுக்கவில்லை என்று தெரிவித்துள்ளார்.

நேரம்தான் எல்லாவற்றையும் தீர்மானிக்கும். நாட்டின் அரசியல் முறையில் மாற்றம் இருக்கவேண்டும். இந்தச் சிக்கலைத் தீர்க்க உதவ நான் தயாராக இருக்கிறேன். இருப்பினும், தேர்தலில் போட்டியிட நான் இதுவரை எந்த முடிவும் எடுக்கவில்லை என்று அவர் கூறியுள்ளார்.

நாட்டின் அரசியல் சூழலில் மாற்றத்தை ஏற்படுத்தும் நோக்கில் செயற்படும் புலமையாளர்களைக் கொண்ட தேசிய மக்கள் இயக்கம், முன்னதாக, முன்னாள் சட்டமா அதிபர் காமினி விஜேசிங்கவை ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறக்கத் திட்டமிட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியிருந்தன. (ஐ)

## சஜித்துக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுதந்திரக் கட்சி தயாராகவுள்ளதாக அந்தக் கட்சியின் பேச்சாளர் வீரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

சுதந்திரக் கட்சி தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

பொதுஜன பெரமுன , சுதந்திரக் கட்சிக்கிடையில் சின்னம் தொடர்பான முரண்பாடுகள் தொடர்கின்றன. இவ்வாறு இறுதி வரை அவர்கள் பொதுச் சின்னம் ஒன்றுக்கு இணக்கப்பாட்டுக்கு வரவில்லை என்றால் எமக்கு இரண்டு மாற்று வழிகள் இருக்கின்றன. தேர்தலில் தனித்து போட்டியிடுதல் அல்லது ஏனைய கட்சிகளுடன் கூட்டணி குறித்து பேச்சு என்பனவே அந்த மாற்று வழிகளாகும்.

சுதந்திரக் கட்சி தனித்துப் போட்டியிடத் தீர்மானித்தால் வேட்பாளர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன என்பதில் மாற்றம் இல்லை. இதற்கான யோசனை கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளது.

இரண்டாவது மாற்றுத் தெரிவு ஜே.பி.வி உள்ளிட்ட ஏனைய சிறுபான்மைக் கட்சிகளுடனும் பேச்சு நடத்தி வலுவான முற்போக்குக் கூட்டணியொன்றை உருவாக்குவதாகும். இதில் இன, மத பேதமின்றி அனைத்துக் கட்சிகளுடனும் பேச்சு நடத்தப்படும். எதிர்வரும் ஓரிரு தினங்களில் அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

அத்தோடு சமூக வலைத்தளங்கள் மற்றும் சில இணைய ஊடகங்களில் வெளிவருவதைப் போன்று அமைச்சர் சஜித் பிரேமதாஸவுடன் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவோ அல்லது சுதந்திர கட்சியோ எவ்வித பேச்சும் நடத்தவில்லை. ஆனால் அவர் ஐ.தே.கவிலிருந்து வெளியேறிப் பொது வேட்பாளராகக் களமிறங்கினால் அவருடன் பேச்சு நடத்த தயாராகவுள்ளோம் – என்றார். (ஐ)

## முன்னாள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மைத்திரிபால சிறிசேன நேற்று உயர் கௌரவ பதவி நிலைகளை வழங்கினார்.

முன்னாள் கடற்படைத்தளபதி வசந்த கரன்னகொட, 'அட்மிரல் ஒவ் த பிளீட்' ஆகவும், முன்னாள் விமானப்படைத்தளபதி றொஷான் குணதிலக, 'மார்ஷல் ஒவ் த எயர் போர்ஸ்' ஆகவும் கௌரவப் பதவி நிலைகளைப் பெற்றுள்ளனர்.

இவர்களுக்கு இந்த உயர் பதவிகளை வழங்கிக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று கொழும்புத் துறைமுகத்தின் கிழக்குக் கொள்கலன் முனையத்தில் இடம்பெற்றது.

இறுதிக்கட்டப் போர்க்காலத்தில் கடற்படைத்தளபதியாக பணியாற்றிய அட்மிரல் வசந்த கரன்னகொட, அட்மிரல் ஒவ் த பிளீட் ஆகவும், விமானப்படைத் தளபதியாகப் பணியாற்றிய எயர் சீவ் மார்ஷல் றொஷான் குணதிலக, மார்ஷல் ஒவ் த எயர்போர்ஸ் ஆகவும் உயர் கௌரவப் பதவிநிலைகளுக்கு உயர்த்தப்பட்டுள்ளனர்.

முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகாவுக்கு வழங்கப்பட்ட பீல்ட் மார்ஷல் பதவிக்கு இணையான பதவி நிலைகளாக இவை உள்ளன. (ஐ)

## ஜனாதிபதி ஆட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தற்போதைய அரசின் இறுதி நேர முயற்சியாக இந்த நடவடிக்கை சத்தம் சந்தடியின்றி முன்னெடுக்கப்பட்டு வருவதாகக் 'காலைக்கதிர்' நாளிதழ் கடந்த சில தினங்களாகச் செய்தி வெளியிட்டு வந்தமை தெரிந்ததே.

இது தொடர்பான பூர்வாங்கப் பேச்சுகளில் பிரமர் ரணில் விக்கிரமசிங்க ஈடுபட்டிருந்தார். கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரனும் இது தொடர்பான தொடர்பாடல்களில் ஈடுபட்டிருந்தார் என்பது தெரிந்ததே.

இந்த முயற்சிக்கு ஜே.வி.பி. மற்றும் ஜனாதிபதியின் ஆதரவு இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டமையை அடுத்து நேற்றுக் காலை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேரடியாகச் சந்தித்து இது பற்றிப் பேசினார்.

ஜே.வி.பியின் எம்.பி. ஒருவர் தனிநபர் பிரேரணையாக நாடாளுமன்றுக்கு சமர்ப்பித்துள்ள அரசமைப்புக்கான 20ஆவது திருத்தத்தை அரசின் பிரேரணையாக சமர்ப்பித்து, நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பங்கு ஆதரவுடன் பிரேரணையை நிறைவேற்றி, சர்வஜன வாக்கெடுப்பு நடத்தி மக்கள் அனுமதியைப் பெற்று, உடனடியாக அந்த அரசமைப்புத் திருத்தத்தை நடைமுறைக்குக் கொண்டு வர முயற்சி எடுப்பது என இச்சந்திப்பில் உடன்பாடு காணப்பட்டது.

அறிவிக்கப்பட்டுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் இந்த முயற்சியை ஒப்பேற்றுவது என்றும் முடிவு செய்யப்பட்டமையை அடுத்து, அந்த விடயத்தை முன்நகர்த்துவதற்காக விசேட அமைச்சரவைக் கூட்டத்தை உடன் கூட்டுவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

அதன்படி நேற்றுப் பிற்பகல் 3 மணிக்கு விசேட அமைச்சரவைக் கூட்டம் கூட்டப்பட்டது.

அதற்கு முன்னர் ஐ.தே.க. முன்னணி அரசின் அமைச்சரவைக்கு முந்திய – உத்தியோகப்பற்றற்ற – கூட்டம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்றது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமையை – இப்போது அறிவிக்கப்பட்டுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் – அவசர அவசரமாக ஒழிக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் முயற்சிக்கு எதிராக இக் கூட்டத்தில் சஜித் அணியினர் ஆக்ரோஷமாகக் குரல் எழுப்பினர். அதனால் கூட்டத்தில் ரணகள நிலைமை ஏற்பட்டது. மோசமான வாய்த்தர்க்கமும் தொடர்ந்தது.

இதே நிலைமை விசேட அமைச்சரவைக் கூட்டத்திலும் நீடித்தது.

அதனால், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமையை ஒழிக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தரப்பின் கடைசி நேர முயற்சி அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்காத நிலையில் கைவிடப்பட்டது.

சஜித் அணியுடன் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ரவூப் ஹக்கீம், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் மனோ கணேசன் தரப்பினரும் ஒன்றுபட்டு நின்று இந்த முயற்சியைக் குழப்பியடித்தனர்.

அமைச்சரவையில் எதிரும் புதிருமான கருத்து நிலவிய போது, இவ்வாறு நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமையை ஒழிக்கும் இறுதி நேர முயற்சி தன்னுடையதல்ல என்றும், பிரதமர் கேட்டுக் கொண்டமையால் இந்த விசேட அமைச்சரவைக் கூட்டத்தில் அவ்விடயத்தை ஆராயத் தாம் இணங்கினார் என்றும் குறிப்பிட்டு, அந்த முயற்சிக்கான முழுப் பொறுப்பை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலையில் சுமத்தி, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தப்பிக் கொண்டார் எனவும் தெரிவிக்கப்பட்டது. (உ)

## வேட்புமனுத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்வரும் நவம்பர் 16ஆம் திகதி நடத்தப்படவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள், ஒக்ரோபர் 6ஆம் திகதி மதியம் 12 மணி வரை கட்டுப்பணம் செலுத்த முடியும்.

அரசியல் கட்சி சார்பில் போட்டியிடும் வேட்பாளர்கள் 50 ஆயிரம் ரூபாவையும், சுயேச்சையாகப் போட்டியிடும் வேட்பாளர்கள் சார்பில் 75 ஆயிரம் ரூபாவையும் கட்டுப்பணமாகத் தேர்தல்கள் செயலகத்தில் செலுத்தவேண்டும்.

ஒக்ரோபர் 6ஆம் திகதியுடன் கட்டுப்பணம் செலுத்துவதற்காகக் கால எல்லை முடிவடையும்.

ஒக்ரோபர் 7ஆம் திகதி, வேட்புமனுத் தாக்கல் இடம்பெறும். அன்று காலை 9 மணிக்கும் 11 மணிக்கும் இடையில் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்ய முடியும் என்று தேர்தல்கள் ஆணைக் குழு அறிவித்துள்ளது. (ஐ)

## மனித உரிமைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலுக்கு உள்ளாக்கப்படுவது குறித்து ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் அன்ரனியோ குட்டரஸ் கவலை வெளியிட்டுள்ளார்.

இலங்கையில் மனித உரிமை ஆர்வலர்கள், செயற்பாட்டாளர்கள் துன்புறுத்தல்களை எதிர்கொள்வதாக மனித உரிமைகள் சபைக்கு சமர்ப்பித்துள்ள புதிய அறிக்கையில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மனித உரிமைப் பாதுகாவலர்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்கள் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்படுகின்றனர் என ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் அலுவலகம் தெரிவித்துள்ளதாக ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார்.

மனித உரிமைகள் சபையின் அமர்வுகளில் கலந்துவிட்டு இலங்கை திரும்பியவர்கள் அதிகாரிகளால் விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்றனர். அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகின்றனர். மனித உரிமைகள் சபையின் அமர்வுகள் மற்றும் பக்கநிகழ்வுகளின்போது பல குழுக்கள் மரண அச்சுறுத்தலை விடுப்பதாகவும் அறிக்கைகள் கிடைத்துள்ளன.

காணாமல்போன தனது கணவரைத் தேடி கண்டுபிடிப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள சந்தியா எக்னலிகொட இணையம் மூலமும் ஏனைய வழிகளிலும் அச்சுறுத்தப்படுவது குறித்து 2018 ஓகஸ்ட் 2 ஆம் திகதி விசேட அறிக்கையாளர்கள் சுட்டிக்காட்டியிருந்தனர்.

மனித உரிமைகள் சபையின் அமர்வில் கலந்து கொண்டமைக்காக சிவில் சமூகப் பிரதிநிதிகள் தாங்கள் கண்காணிக்கப்படுவதாகவும் , தங்களுக்குக் கொலை மிரட்டல்கள் உட்பட அச்சுறுத்தல்கள் விடுக்கப்படுவதாகவும் தெரிவித்துள்ளனர் என ஐ.நா. செயலாளர் நாயகம் கவலை தெரிவித்துள்ளார். (ஐ)

## சந்தர்ப்ப வாதமும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றாண்டு வாக்குறுதிகளை கைவிடுவதா? கொள்கை அளவில் எந்த நேரத்திலும் நிறைவேற்று அதிகாரத்தை ஒழிப்பதைத் தமிழ்க் கூட்டமைப்பு ஆதரிக்கும்.

– இவ்வாறு தெரிவித்திருக்கிறார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன்.

தனது ருவிட்டர் பதிவிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் நேற்று வியாழக்கிழமை காலை நடத்திய பேச்சுக்களையடுத்து நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிக்கும் 20ஆவது திருத்தச் சட்ட வரைவை நாடாளுமன்றில் நிறைவேற்றுவதற்கான முயற்சிகளை முன்னெடுத்தனர்.

இதற்காக நேற்றுப் பிற்பகல் 3 மணிக்கு சிறப்பு அமைச்சரவைக் கூட்டமும் கூட்டப்பட்டது. எனினும் அமைச்சர் சஜித் பிரேமதாஸவின் அணியினரின் கடும் எதிர்ப்பால் அமைச்சரவைக் கூட்டம் முடிவின்றி நிறைவடைந்தது.

இந்த நிலையிலேயே தமிழ் தேசியக் கூட்டமைப்பு இந்த முயற்சி பற்றி தனது அதிருப்தியை வெளியிட்டுள்ளது. (ஐ)

## நிறைவேற்றதிகார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுத் திட்டவட்டமாக அறிவித்தார்.

அத்துடன், கோட்டாபய ராஜபக்ஷவின் வெற்றி கருத்து கணிப்புகள் மூலம் உறுதியாகியுள்ளதாலேயே ஜனாதிபதி முறைமையை நீக்குவதற்கு திரைமறைவில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஜனாதிபதித் தேர்தலுக்கான அறிவிப்பு வெளியாகியுள்ள நிலையில் தோல்விப் பீதியால் ஜனாதிபதியும், பிரதமரும் ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவுள்ளனர் என்றும், இதற்கான விசேட அமைச்சரவைப் பத்திரம் இன்று(நேற்று) சமர்ப்பிக்கப்படும் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அவர்களின் இந்த முயற்சி வெற்றிபெறுவதற்கு நாம் ஒருபோதும் இடமளிக்கமாட்டோம் என்பதுடன் தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளுக்காக நாட்டின் அரசமைப்புடன் விளையாட வேண்டாம் எனவும் கூறிவைக்க விரும்புகின்றோம்.

நவம்பர் 16 ஆம் திகதிக்கு பிறகு ஜனாதிபதிக்கும், பிரதமருக்கு வீட்டுக்குச் செல்லவேண்டிய நிலை ஏற்படும் என்பதால் கௌரவமான முறையில் விடைபெற்றுச் செல்லுமாறு கேட்டுக் கொள்கின்றோம். குறிப்பாக இறுதிக் காலப்பகுதியிலானது கௌரவத்தை பாதுகாத்துக்கொள்வது குறித்து ஜனாதிபதி சிந்திக்கவேண்டும்.

ஏனெனில் எந்தக் கொம்பனைக் களமிறக்கினாலும் ஜனாதிபதி தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷவே வெற்றி பெறுவார் என்பதை கருத்துக் கணிப்புகள் உறுதிப்படுத்திவிட்டன. அதன் காரணமாகவே ஜனாதிபதி முறையை அழித்து ஜனநாயகத்தைக் குழிதோண்டி புதைப்பதற்கு முற்படுகின்றனர். அதற்கு ஒருபோதும் இடமளிக்கமாட்டோம். நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மை கிடைக்காது. – என்றார். (ஐ)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## இந்தத் தேர்தலையாவது ஒன்றுபட்டு அணுகுமா தமிழர்களின் தலைமை?

தற்போதைய அரசியல் களநிலைவரங்கள் தொடர்பாக ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன் முக்கியமான கருத்து ஒன்றை முன் வைத்திருக்கின்றார்.

அவரின் கருத்துத் தமிழ் அரசியல் தலைவர்களின் காதுகளில் விழுமா அல்லது செவிடன் காதில் ஊதிய சங்கா குமா என்பதற்குக் காலம்தான் பதில் சொல்லவேண்டும்.

'எழுக தமிழ்' நிகழ்வின் நிறைவை ஒட்டிச் செய்தியாளர்களுக்கு நேற்றுமுன்தினம் கருத்து வெளியிட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்த விடயமும் ஏற்கனவே இப்பத்தியில் பல தடவைகள் நாம் சுட்டிக்காட்டியதுதான். அதையே சுரேஷ் பிறேமச்சந்திரனும் வலியுறுத்தியுள்ளார்.

"தமிழர் தரப்புகள் எல்லாம் ஒன்றிணைந்து தமிழ் மக்களின் அரசியல் கோரிக்கைகளை முன்வைக்க வேண்டும்.

"வரும் ஜனாதிபதித் தேர்தலின்போது சர்வதேச சமூகத்தின் அனுசரணையில் வேட்பாளர்களிடம் இருந்து உத்தரவாதத்தைப் பெற்று, அதன் பின்னரே ஆதரவு வழங்க வேண்டும்.

"அப்படி இல்லாமல், சரியான உத்தரவாதங்கள் பெறாமல், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியை ஆதரிப்பது அழிவுக்குச் சமனானது." – என எச்சரித்திருக்கின்றார் அவர்.

ஐ.தே.கட்சியை ஆதரிக்கும் முடிவை கூட்டமைப்பு எடுக்கலாம் என்றோ, எடுக்கக்கூடாது என்றோ நாம் கூறவரவில்லை.

அது அப்போதைய அரசியல் களநிலைவரங்களையும், வேட்பாளர்கள் மற்றும் அவர்களின் கட்சிகளின் கொள்கை, கோட்பாட்டுப் போக்குகளின் அடிப்படைகளையும் பொறுத்து எடுக்கப்படவேண்டியதாக இருக்கும்.

ஆனால், தமிழரின் தேசியம், சுயநிர்ணயம், தாயகம் ஆகியவை தொடர்பான பிறப்புரிமைகள் குறித்துப் பேசும் தமிழர் தரப்புகளும், கட்சிகளும், வரவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலை ஒன்றுபட்டு நின்று ஒரு பொது அணுகுமுறையில் எதிர்கொள்வது குறித்தே நாம் வலியுறுத்த விரும்புகிறோம்.

நாம் ஏற்கனவே வலியுறுத்திய இந்த விடயத்தை இப்போது சுரேஷ் பிறேமச்சந்திரனும் பிரேரித்திருக்கின்றார்.

இப்போது அரசியல் ரீதியில் தம்மோடு ஒரு தளத்தில் நிற்கும் முன்னாள் முதல்வர் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன் போன்ற தரப்புகளுடன் இந்தப் பொது அணுகுமுறை குறித்து அவர் பேசி ஓர் உடன்பாட்டுக்கு வரவேண்டும்.

அதன் பின்னர், அத்தகைய முயற்சிக்கான அழைப்பை அவர்களது தரப்பே தமிழ்க் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி போன்ற தரப்புகளுக்கு விடுத்து, மூடிய அறைக்குள் ஒன்று கூடி அது குறித்து அவர்கள் தமக்குள் உசாவ முடியும்.

அப்படியான விரிவான கலந்துரையாடலில் ஓர் இணக்கப்பாடு வருமானால், அந்த இணக்கப்பாட்டின் அடிப்படையில் இந்த ஜனாதிபதித் தேர்தலைத் தமிழர் தேசம் ஒன்றுபட்டு எதிர்கொள்ளும் வழிகாட்டலை அவர்கள் தமது மக்களுக்கு வழங்க முடியும்.

உள்ளூராட்சித் தேர்தல்களிலும், மாகாணசபைத் தேர்தல்களிலும், நாடாளுமன்றத் தேர்தல்களிலும் பிரதிநிதித்துவத் தெரிவுகளுக்காகத் தங்களுக்குள் தனித்தனியாக அணி சேர்ந்தும், எதிரும் புதிருமாக அணி வகுத்தும், போட்டி போட்டு, முட்டி மோதிக் களத்தில் பலப் பரீட்சை செய்யும் தமிழ்த் தேசிய கட்சிகள், அந்த நிலைப்பாட்டில் இருந்து சற்றுத் தள்ளி வந்து, தமக்குள் ஒத்திசைவாக இயங்கக் கூடிய வாய்ப்பை இந்த ஜனாதிபதித் தேர்தல் தந்து நிற்கின்றது என்பது முக்கிய அம்சமாகும்.

சிங்களத்தின் ஜனாதிபதியைத் தெரிவு செய்யும் ஒரு தேர்தலில் தமிழன் தனது பிரதிநிதித்துவத்தைப் பெறமுடியாது. ஆனால் சிங்களத்தின் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறும் தரப்பைத் தீர்மானிப்பதில் தமிழர் தேசம் கணிசமான – ஆழமான – பங்களிப்பைச் செய்யமுடியும்.

அதற்குக் கடந்த ஜனாதிபதித் தேர்தல் நல்லதோர் உதாரணம். அதேபோல தமிழர் தேசத்தின் பங்களிப்பு இந்தத் தேர்தல் முடிவுகளை எப்படி மாற்றி அமைக்கும் என்பதைப் புரிவதற்கு 2005 நவம்பர் தேர்தலும் கூட ஒரு நல்ல வாய்ப்புத்தான்.

இந்தத் தேர்தலை தமிழர் தேசம் தனித்துவமாக ஒருமைப்பட்டு பலமான சக்தியாக எதிர்கொள்வதன் மூலம் அதில் கணிசமான தாக்கத்தைச் செலுத்தவும் –

அதன் மூலம் தனது அபிலாஷைகளை அடையும் இலக்கு நோக்கி முன்நகர்வதற்கான வாய்ப்பாக அதனைப் பயன்படுத்திக் கொள்ளவும் – ஏன் முயற்சிக்கக் கூடாது?

கட்சி ரீதியாகவோ, அணிகள், குழுமங்கள் அடிப்படையிலோ, தனிப்பட்ட விருப்பு வெறுப்புகள், கோபதாபங்கள், முரண்பாட்டு மோதல் ஆகியவற்றின் காரணத்திலோ பிசகுப்பட்டு கன்னை பிரிந்து நிற்காமல், இந்தத் தேர்தலையாவது ஐக்கியப்பட்டு அணுகுவதற்கான முன்முயற்சிகளை நமது தமிழ்க் கட்சிகள் ஏன் ஆரம்பிக்கக்கூடாது?

இன்று சாதாரண தமிழ் மக்களின் அதீத எதிர்பார்ப்பாக இதுவே இருக்கும் என்பது நமது கணிப்பு. இதனை உணர்ந்து தலைவர்கள் செயற்படுவார்களா? செயற்பட்டால் தமிழினத்தின் விமோசனத்துக்கான ஆரம்பப் புள்ளியாகக் கூட அந்த ஐக்கியம் அமையலாம்.

# வவுனியா தெற்கு கல்வி அலுவலகத்தை முற்றுகையிட்ட சிங்களப் பெற்றோர்கள்



வவுனியா, செப். 20

தமது பகுதிகளில் அமைந்துள்ள பாடசாலைகளுக்கு ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதாகத் தெரிவித்து வவுனியா மகாகச்சகொடி, மருதமடு, அலகல்லை போன்ற பகுதிகளில் வசிக்கும் பெற்றோர்கள் வவுனியா தெற்கு வலயக் கல்வி அலுவலகத்தை நேற்று முன்தினம் காலை முற்றுகையிட்டனர்.

இது குறித்து அவர்கள் தெரிவிக்கையில் –

தமது பிள்ளைகள் கற்கும் பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை நீண்ட காலமாக நிலவி வருகின்றது. இதனால் மாணவர்களின் கல்வி தரம் வீழ்ச்சியடைந்த நிலையில் காணப்படுகின்றது. ஆசிரியர் நியமனங்களின்போது அனைத்து வசதிகளும் காணப்படுகின்ற தேசிய பாடசாலைகளுக்கே முக்கியத்துவம் அழிக்கப்படுகின்றது. அப்படியாயின் எமது பிள்ளைகள் எந்தவகையில் கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ளமுடியும்.

நாம் வீதி கேட்கவில்லை, வீடு கேட்கவில்லை, ஆனால் எமது பிள்ளைகளுக்குப் பெறுமதியான கல்வி வேண்டும். அதனையே கேட்கிறோம், எனவே மிக விரைவாக எமது பாடசாலைகளுக்கு ஆசிரியர்களை நியமிப்பதற்கு அதிகாரிகள் நடவடிக்கைகளை எடுப்பதுடன், வவுனியா மாவட்டத்திலிருந்து தேசிய கல்வியற் கல்லூரிகளுக்குத் தெரிவு செய்யப்பட்டு வெளியேறும் சிங்கள ஆசிரியர்களை வவுனியாவில் அமைந்துள்ள சிங்கள பாடசாலைகளுக்கே நியமிக்க வேண்டும் – என்றனர்.

இது தொடர்பாக வவுனியா வலயக்கல்வி அதிகாரி மு.இராதாகிருஷ்ணனிடம் கலந்துரையாடிய அவர்கள் மழையையும் பொருட்படுத்தாது வலய கல்வி பணிமனை முன்பாக நீண்ட நேரம் குழுமியிருந்தனர்.

இது தொடர்பாக வவுனியா தெற்கு வலயக் கல்வி பணிப்பாளர் மு.இராதாகிருஷ்ணனிடம் கேட்டபோது, அவர்களது கோரிக்கை தொடர்பாக மத்திய கல்வி அமைச்சு, மற்றும் மாகாணக் கல்வி திணைக்களத்துக்கு தெரியப்படுத்தவுள்ளேன். அத்துடன் மிக விரைவில் தற்காலிகமாக அவர்களுக்கு ஏதாவது தீர்வை வழங்கமுடியுமா என்பது தொடர்பாக ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கவுள்ளேன் – என்றார். (ஐ)

# மாபெரும் பேரணிகளை நடத்த மஹிந்த அணியினர் தீர்மானம்

கொழும்பு, செப். 20

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் நாடளாவிய ரீதியில் மாபெரும் பேரணிகளை நடத்துவதற்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தீர்மானித்துள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் மிக முக்கிய கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றது.

மஹிந்த அணியின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டபாய ராஜபக்ஷ, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் தலைமையில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

இதன்போது ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக நாடளாவிய ரீதியில் எட்டு மாபெரும் பேரணிகளை நடத்துவதற்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தீர்மானித்துள்ளது.

இதில் நான்கு பேரணிகளுக்கு மஹிந்த ராஜபக்ஷவும், எஞ்சியுள்ள நான்கு பேரணிகளுக்கு கோட்டாவும் தலைமை தாங்கவுள்ளனர்.

இதேவேளை, இதன்போது பொதுஜன பெரமுனவின் ஒழுங்கமைப்பு நடவடிக்கைகள் பலவீனமாக உள்ள ஐந்து மாவட்டங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, வவுனியா மற்றும் பதுளை ஆகிய மாவட்டங்களிலேயே கட்சி நடவடிக்கைகள் பலவீனமாக உள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன் காரணமாக அந்த மாவட்டங்களில் சிறப்புக் கவனம் செலுத்தவும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமை தீர்மானித்துள்ளது.

அத்துடன், அந்த மாவட்டங்களுக்கான ஒருங்கிணைப்பாளர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாண மாவட்டத்துக்கு சனத் நிஷாந்த மற்றும் மஹிந்தானந்த அளுத்கமகே ஆகியோர் ஒருங்கிணைப்பாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

பதுளை மாவட்ட ஒருங்கிணைப்பாளராக பிரசன்ன ரணதுங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த ஐந்து மாவட்டங்களுக்குமான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் நாடாளுமன்ற உறுப்பினர் சுசில் பிரேமஜயந்தவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (ஐ)

# வவுனியாவில் டெங்கு ஒழிப்புச் செயற்றிட்டம்



வவுனியா, செப். 20

வவுனியா நகர்ப்பகுதியில் அதிகளவு டெங்கு நுளம்புகள் பெருகி வருகின்றன. அவற்றை அழித்தொழிப்பதற்கு வவுனியா நகர்ப் பகுதிகளில் டெங்கு ஒழிப்புச் செயற்றிட்டத்தைச் சுகாதாரத் துறையினர் மேற்கொண்டுள்ளனர்.

வவுனியா குருமன்காடு, மன்னார் வீதி, வைரவப்புளியங்குளம் போன்ற பகுதிகளில் அமைந்துள்ள வர்த்தக நிலையங்கள் , கல்வி நிலையங்கள் , தனியார் மருத்துவமனைகள் போன்றவற்றுக்கு முன்பாகவும் , கால்வாய்களுக்குள்ளும், நகரையண்டிய பகுதிகளிலும் டெங்கு நுளம்பு பெருகும் இடங்களில் புகையூட்டும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ஐ - 100)

**நாளை** 21.09.2019 சனிக்கிழமை

நட்சத்திரம்: ரோகிணி மு.ப 8.35 வரை
திதி :ஸப்தமி பி.ப 4.13 வரை
இராகுகாலம் : 9.02 – 10.32
சுப நேரம் : 3.02 –4.32
புரட்டாதிச்சனி

# இலங்கைக்குள் சீனா வருவதற்கு காரணம் இந்திய அரசின் தவறான அணுகுமுறையே!

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கூறுகிறது



யாழ்ப்பாணம், செப். 20

இலங்கைக்குள் சீனா வருவதற்குக் காரணம் இந்திய அரசின் தவறான அணுகுமுறையே எனத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஊடகவிய லாளர் சந்திப்பிலேயே அவர் இவ்விடயத்தைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு யுத்தத்தின்போது இந்தியா உதவியதற்கான காரணம், அவரைத் தங்களின் கைகளுக்குள் வைத்துகொள்ள முடியுமென்ற நோக்கிலேயே ஆகும்.

ஆனால் அந்த விடயத்தில் அவர்களுக்கு ஏமாற்றம் மட்டுமே மிஞ்சியது. மீண்டும் அதே தவறைச் செய்ய இந்தியா முற்படுகின்றது.

இந்திய அரசின் தவறான அணுகுமுறையும் இராஜதந்திர குறைபாடுமே அதன் தென் பகுதி யான இலங்கைக்குள் சீனத் தரப்பை அனுமதித் தமைக்கான காரணமாகும். இதிலிருந்து இந் தியா பாடங்களைக் கற்றுக்கொண்டிருக்க வேண்டும்.

இலங்கை பௌத்த பேரினவாதம் இந்தியாவுக்கு ஒருபோதும் விசுவாசமாக இருக்கப்போவதில்லை. இந்தியாவின் நிரந்தர நண்பர்கள் தமிழர்கள் மாத்திரமேயாகும் – என்றார். (ஐ)

# மலையக எம்.பிக்களின் தொகை 19ஆக அதிகரிக்கப்படவேண்டும்!

## வடிவேல் சுரேஷ் கோரிக்கை

கொழும்பு, செப். 20

மலையக மக்களின் பிரதிநிதிகளாக உள்ள 9நாடாளுமன்றஉறுப்பினர்களின்எண்ணிக்கை, விகிதாசாரப்படி 19 ஆக அதிகரிக்க வேண்டு மென இராஜாங்க அமைச்சர் வடிவேல் சுரேஷ் தெரிவித்துள்ளார்.

வணிகக் கப்பற்றொழில் திருத்தச் சட்ட வரைவு மீதான விவாதம் நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ் வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

மலையக மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்த 9 நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளபோதிலும், விகிதாசாரப்படி 19 எம்.பிகள் இருக்க வேண்டும். 10 நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தாரை வார்த்துக் கொடுத்துள்ளனர். மக்களின் நாடாளு மன்றப் பிரதிநிதித்துவத்தை தாரை வார்த்துக் கொடுத்து விட் டுச் சிலர், மலை யக மக்களின் பிரச்சினைகளைப் பேசி வருகிறார்கள்.



1992 ஆம் ஆண்டு, பெருந் தோட்டங்கள் தனி யார்மயப்படுத்தப்பட் டாலும் 1992 ஆண் டுகளுக்குப் பின்ன ரும் மலையக மக்க ளின் காணி உரிமை களை அபகரிக்க முடியாது. இதனை சுற்றறிக்கையாக நான் வெளியிட்டுள்ளேன்.

விரைவில் பெருந்தோட்டப் பாடசாலைகளுக் கும் காணி உரிமைகள் வழங்கப்படும். அரச நியமனங்களின்போது பேரம்பேசும் சக்தியை பயன்படுத்தவுள்ளேன் – என்றார். (ஐ)

# மின்தடை

யாழ்ப்பாணம், செப். 18

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க் கங்களின் கட்ட மைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளிக்கிழமை காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை–

**யாழ் பிரதேசத்தில் -**

அல்வாய், மாலுசந்தி, வியாபாரிமூலை, இன்பருட்டி, சுப்பர் மடம், நாவலடி, லங்கா பாடசாலை, பருத்தித்துறை நகரம், சாரை யடி, கிராமக்கோடு, கல்லூரி வீதி, VM வீதி, தம்பசிட்டி, சாளம்பை, புனிதநகர், மாதனை, கற்கோவளம், வெளிச்சவீடு, தும்பளை, வறாத்துப்பளை, திகிரி, கற்கோவளம் ஐஸ் தொழிற்சாலை, மந்திகை, இராமநாதன் வீதி, அரசடி வீதி, வைமன் வீதி, கோவில் வீதி, ஆஸ்பத்திரி வீதி, மார்டின் வீதி சந்தியிலிருந்து A9 வீதி வரை, நல்லூர் கோவிலடி, றக்கா வீதி, மருதடி வீதி, யாழ் பல்கலைக்கழக விஞ்ஞான பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இயற்கை விஞ்ஞான பீடம், பிரிட்டிஷ் கவுன்சில், நாவலர் வீதி தியாகி அறக்கொடை நிலையம், பூதர்மடம், கோப்பாய், இருபாலை, வசந்தபுரம், கட்டைப்பிராய், இலங்கநாயகி, ஆடியபாதம் வீதி , நல்லூர், கல்வியங்காடு, திருநெல்வேலி ஒரு பகுதி, திருநெல்வேலி சந்தை பிரதேசம், திருநெல்வேலி பாற்பண்ணை பிரதேசம், இராமலிங்கம் ஆடியபாதம் வீதி சந்தி, முகாமைத்துவபீடம், சட்டநாதர் வீதி , பருத்தித்துறை வீதி யில் கல்வியங்காட்டு சந்தையிலிருந்து நல்லூர் கோவில் வரை, நல்லூர் குறுக்கு வீதி , செம்மணி வீதி, கச்சேரி நல்லூர் வீதி, கனகரட்ணம் வீதி, திருமகள் வீதி, மலர்மகள் வீதி, கலைமகள் வீதி, பூமகள் வீதி ,சாஷ்திரியார் வீதி , நடுத்தெருலேன், நாவலர் வீதி, நொத்தாரிஸ் லேன், வேலப்பர் வீதி , புவனேஸ்வரி அம் மாள் வீதி, புறூடி லேன், ஸ்ரான்லி கல்லூரி வீதி, சுப்பிரமணியம் வீதி, முதலியார் வீதி, பாரதி லேன், புங்கன்குளம் வீதி புகையிரத கடவை வரை, நாயன்மார் வீதி, குகன் வீதி, பொன்னம்பலம் வீதி, நாவலர் வீதியில் மாம்பழம் சந்தியிலிருந்து நல்லூர் குறுக்கு வீதி வரை, A9 வீதியில் பாரதி வீதியிலிருந்து செம்மணி வளைவு வரை, நெடுங்குளம் வீதி புகையிரதக் கடவை வரை, முள்ளி, நாவலடி, பூம்புகார், அரியாலை கிழக்கு, கனகரத்தினம் மத் திய மகாவித்தியாலயம், SOS சிறுவர் பூங்கா, அரியாலை டீசல் அன்ட் மோட்டார் என்ஜினியறிங் பி.எல்.சி, நாயன்மார்கட்டு Carlton Sports Network (CSN) ஆகிய இடங்களிலும் –

**கிளிநொச்சி பிரதேசத்தில் –**

பல்லவராயங்கட்டிலிருந்து வெள்ளாங்குளம் வரை, 651 ஆவது படைப்பிரிவு முகாம், நாச்சிக்குடா கடற்படை முகாம், இயாஸ் மொஹமட் ஐஸ் தொழிற்சாலை ஆகிய பிரதேசங்களி லும் மின் விநியோகம்தடைப்பட்டிருக்கும் என்று மின் பொறி யியலாளர் அறிவித்துள்ளார்.

# வெடிபொருள்கள் சில அரியாலையில் மீட்பு

யாழ்ப்பாணம், செப். 20

அரியாலை அருளம்பலம் வீதி யில் வெடிபொருட்கள் சில மீட்கப் பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

அந்தப் பகுதியில் அமைந் துள்ள காணி ஒன்றில் முன்னெ டுக்கப்பட்ட துப்புரவு நடவடிக் கையின்போதே நேற்றுக் காலை இந்த வெடிபொருள்கள் மீட்கப் பட்டுள்ளன.

இதன்போது கிரனைட் மற்றும் இரண்டு மிதிவெடிகள் மீட்கப்பட் டுள்ளன.

அந்தப் பகுதியில் மேலும் சில வெடிபொருள்கள் இருக்கலாம் என்ற அச்சம் காரணமாக துப்பர வுப் பணிகள் இடைநிறுத்தப்பட் டுள்ளன எனவும் அவர் கூறினார்.

# இரத்தினபுரி மாவட்டத்துக்கு தமிழ்த் தேசியப் பாடசாலை

கொழும்பு, செப். 20

இரத்தினபுரி மாவட்டத்துக்கு தனியானதொரு தமிழ் தேசியப் பாடசாலை அமைக்கப்பட உள்ளதாக பிரதி அமைச்சர் கருணாரத்ன பரணவிதான தெரிவித்தார்.



அரச தகவல் திணைக் களத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப் பொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த அவர்,

அரசகரும மொழிகள் அமைச்சு, மலைநாட்டு புதிய கிராமங்கள், சமூக அபிவிருத்தி அமைச்சு, இரத்தினபுரி வர்த்தகர்களின் உதவியைப் பெற்றுக் கொண்டு இந்தப் பாடசாலை அமைக்கப்படும்.

மேற்படி பாடசாலை அமைப்பதற்கான இரத்தினபுரி புதிய நகர பகுதியில் காணியொன்று பெற்றுக்கொள் ளப்பட்டுள்ளது – என்றார். (ஐ)



# இந்தியாவின் கூட்டாட்சி முறைக்கு எதிரானது அமித்ஷாவின் கருத்து

## வீரப்ப மொய்லி தெரிவிப்பு



புதுடில்லி,செப்.20

அமித் ஷாவின் ஒரே நாடு, ஒரே மொழி கருத்து இந்தியாவின் கூட்டாட்சி முறைக்கு எதிரானது என்று காங்கிரஸ் மூத்த தலைவர் வீரப்ப மொய்லி கூறினார்.

காங்கிரஸ் மூத்த தலைவரும், கர்நாடக மாநில முன்னாள் முதலமைச்சருமான வீரப்ப மொய்லி நிருபர்களிடம் கூறியதாவது:-

'ஒரே நாடு, ஒரே மொழி', 'ஒரே நாடு, ஒரே தேர்தல்' போன்ற உள்துறை அமைச்சர் அமித்ஷாவின் சமீபத்திய கருத்துகள் இந்தியாவின் கூட்டாட்சி முறைக்கும், ஜனநாயகத்துக்கும் எதிரானது. அரசியல்சாசனத்தில் கூறப்பட்டுள்ள கொள்கைகளுக்கும் முரணானது.

இந்தியா போன்ற நாட்டின் உள்துறை மந்திரியாக இருப்பவர் எப்படி இதுபோன்ற கருத்துகளை மக்களின் மனதில் திணிக்க முயலுகிறார். நாட்டின் ஒற்றுமைக்காக இதனை ஒதுக்கிவைக்க வேண்டியது அவசியம். எனவே அமித்ஷா இதுபோன்ற கருத்துகளைத் திரும்பப்பெற வேண்டும்.

இந்தியாவில் பல அரசியல் கட்சி ஜனநாயகம் தோல்வி அடைந்துவிட்டது எனவும் அமித்ஷா கூறியிருக்கிறார். உண்மையில் பல கட்சி ஜனநாயகம் நாட்டின் ஒற்றுமையையும், ஒருங்கிணைப்பையும் சேதமடையாமல் பாதுகாத்து வைத்திருப்பதையும், ஜனநாயகத்தை துடிப்பாக வைத்திருப்பதையும் அவர் மறந்துவிட்டார். இந்தியாவின் ஜனநாயக நிலைத்தன்மை மதசார்பற்ற தன்மையின் அடிப்படையில் தான் அமைந்துள்ளது.-இவ்வாறு வீரப்ப மொய்லி கூறினார்.



பிரதமர் மோடியை மேற்கு வங்காள முதலமைச்சர் மம்தா பானர்ஜி நேற்றுமுன் தினம் சந்தித்து பல் வேறு விவகாரங்கள் குறித்து ஆலோசனை நடத்தினார்.

# மோடியின் அமெரிக்க பயணத்துக்கு தங்கள் வான்வெளியைப் பயன்படுத்த மறுத்து விட்டது பாகிஸ்தான்

புதுடில்லி,செப்.20

பிரதமர் மோடி அமெரிக்கா செல்வதற்கு, வான்வெளியை பயன்படுத்த அனுமதிக்காத பாகிஸ்தானுக்கு இந்தியா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

அமெரிக்காவில் ஒருவார சுற்றுப்பயணமாக பிரதமர் நரேந்திர மோடி நாளை பயணம் மேற்கொள்ள இருக்கின்றார். அவரது வெளிநாட்டு பயணத்துக்கு பாகிஸ்தான் வான்வெளியை பயன்படுத்த இந்திய வெளியுறவுத்துறை அதிகாரிகள் பாகிஸ்தானிடம் அனுமதி கோரியிருந்தனர்.

இந்தநிலையில், இந்திய பிரதமரின் வெளிநாட்டு பயணத்துக்கு தங்கள் நாட்டு வான்வெளியை பயன்படுத்த அனுமதிக்க முடியாது என பாகிஸ்தான் வெளியுறவுத் துறை அமைச்சர் குரேஷி தெரிவித்தார்.

பாகிஸ்தானின் இந்த முடிவுக்கு இந்தியா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. இதுகுறித்து செய்தியாளர்களிடம் பேசிய வெளியுறவு அமைச்சக அதிகாரி, பாகிஸ்தானின் செயல்பாடுகள் இருதரப்பு உறவில் மேலும் பின்னடைவை ஏற்படுத்தும் என்றார்.



காஷ்மீருக்கு வழங்கப்பட்டு வந்த சிறப்பு அந்தஸ்தை நீக்கி, ஜம்மு காஷ்மீர் மற்றும் லடாக் என இரு யூனியன் பிரதேசங்களாக பிரிக்கப்பட்டதில் இருந்து பாகிஸ்தான் கடுமையாக விமர்சித்து வருகிறது.

இந்தியாவுடனான வர்த்தக, போக்குவரத்து உறவுகளைத் துண்டித்துக் கொண்ட பாகிஸ்தான் தூதரக அதிகாரிகளையும் வாபஸ் பெற்றது. இரு நாடுகளுக்கிடையே இயங்கி வந்த ரயில் மற்றும் பஸ் போக்குவரத்தையும் நிறுத்தியதுடன், குறிப்பிட்ட வான்வழி தடங்கள் வழியாக பறக்கவும் பாகிஸ்தான் தடை விதித்துள்ளது.

# விக்ரம் லாண்டரின் ஆயுள்காலம் இன்றுடன் முடிவுக்கு வருகிறது

## இதுவரை எந்த தகவலும் இல்லை

சென்னை,செப்.20

நிலவின் மேற்பரப்பில் விழுந்துள்ள விக்ரம் லாண்டரின் 14 நாள்கள் ஆயுட்காலம் இன்றுடன் முடிவடையவுள்ள நிலையில் இதுவரை லாண்டருக்கும் கட்டுப்பாட்டு மையத்துக்கும் எந்த தொடர்பையும் ஏற்படுத்த இயலவில்லை என இஸ்ரோ தெரிவித்துள்ளது.

நிலவை ஆய்வு செய்வதற்கு சந்திரயான்-2 என்ற விண்கலத்தை இந்தியா கடந்த ஜூலை மாதம் 22 ஆம் திகதி விண்ணில் செலுத்தியது.

48 நாள்கள் பயணத்திற்கு பிறகு சந்திரயான்-2 நிலவை நெருங்கியது.

சந்திரயான்-2 விண்கலத்தில் இருந்து பிரிந்த லாண்டர் கருவியை நிலவின் மேற்பரப்பில் தரை இறக்க இஸ்ரோ விஞ்ஞானிகள் கடந்த 7 ஆம் திகதி நடவடிக்கை மேற்கொண்டனர். ஆனால் திடீரென அதிக வேகம் ஏற்பட்டதால் லாண்டர் கருவி சற்று திசை மாறி சென்று விட்டது.

இதனால் தகவல் தொடர்பை லாண்டர் கருவி இழந்தது. இந்த நிலையில் லாண்டர் நிலவின் தென் துருவ பகுதியில் தரை இறக்க திட்டமிடப்பட்ட பகுதியில் இருந்து சுமார் ஒரு கிலோ மீற்றர் தொலைவில் விழுந்து இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

இதையடுத்து லாண்டருடன் தொடர்பை ஏற்படுத்த இஸ்ரோ விஞ்ஞானிகள் முயற்சிகள் மேற்கொண்டனர். ஆனால் அதற்கு பலன் கிடைக்கவில்லை.

இதைத் தொடர்ந்து அமெரிக்காவின் நாசா விஞ்ஞானிகளும் லாண்டரை தொடர்பு கொள்ள முயற்சி செய்தனர். அமெரிக்காவின் விண்கலம் ஒன்று தற்போது நிலவைச் சுற்றி வந்து ஆய்வு செய்து கொண்டு இருக்கிறது.

அந்த விண்கலம் மூலம் முயற்சி நடந்தது. ஆனால் நாசா முயற்சிக்கும் வெற்றி கிடைக்கவில்லை.

நிலவின் தென் துருவ பகுதியை முதன் முதலாக இந்தியாதான் நெருங்கி சென்றுள்ளது. நிலவில் கடந்த 7 ஆம் திகதி முதல் இன்று (வெள்ளிக்கிழமை) வரை 14 நாள்கள் பகல் பொழுது நாள்களாகும். எனவே இந்த 14 நாள்களும் பகல் நேரத்தில் லாண்டர் கருவி மூலம் ஆய்வு செய்ய இஸ்ரோ விஞ்ஞானிகள் ஏற்பாடு செய்து இருந்தனர்.

நிலவின் தென்துருவ பகுதியில் இரவில் கடும் குளிர் நிலவும் என்பதால் இரவு நேரம் இருக்கும் 14 நாள்களும் ஆய்வு செய்ய இயலாது. இதை கருத்தில் கொண்டுதான் 7 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரை 14 நாள்கள் பகலில் ஆய்வு நடத்த லாண்டரில் ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருந்தன.



அதன்படி லாண்டரின் 14 நாள்கள் ஆயுள்காலம் இன்றுடன் முடிகிறது. எனவே இன்று தொடர்பு கிடைத்தால் சிறிது ஆராய்ச்சியை செய்ய முடியும்.

ஆனால் இதுவரை லாண்டருக்கும் பெங்களூரில் உள்ள தரை கட்டுப்பாட்டு மையத்துக்கும் எந்த தொடர்பையும் ஏற்படுத்த இயலவில்லை. எனவே லாண்டரை இனி பயன்படுத்த முடியுமா? என்பதில் இஸ்ரோ விஞ்ஞானிகள் நம்பிக்கை இழந்துள்ளனர்.

சனிக்கிழமை முதல் நிலவின் தென் துருவ பகுதியில் தொடங்கும் இரவு நேரத்தில் மைனஸ் 240 டிகிரி செல்சியஸ் அளவுக்கு தாங்க முடியாதபடி மிக மிக கடுமையான குளிர் உருவாகும். அந்த கடும் குளிரில் லாண்டர் மற்றும் ரோவரில் உள்ள எலட்ரானிக் கருவிகள் அனைத்தும் பழுதடைந்து விடும்.

எனவே இனி லாண்டரை பயன்படுத்த இயலுமா? என்பதில் கேள்விக்குறி எழுந்துள்ளது. நிலவில் அடுத்த பகல் பொழுது தொடங்கும் போது கூட லாண்டரை தட்டி எழுப்ப இயலாது. இதை கருத்தில் கொண்டு லாண்டர் கருவியில் கடைசி நிமிடத்தில் ஏன் கோளாறு ஏற்பட்டது என்பது பற்றி இஸ்ரோ விஞ்ஞானிகள் நிபுணர் குழு விசாரணை தொடங்கியது.

# கோதாவரி ஆற்றில் படகு விபத்து; சாவு எண்ணிக்கை 34 ஆக உயர்வு

அமராவதி,செப்.20

ஆந்திராவின் கிழக்கு கோதாவரி மாவட்டத்தில் ஏற்பட்ட படகு விபத்தில் சிக்கி பலியானோர் எண்ணிக்கை 34 ஆக உயர்ந்துள்ளது.



ஆந்திர மாநிலம், கிழக்கு கோதாவரி மாவட்டத்தின் வழியாக கோதாவரி ஆறு பாய்கிறது. இம்மாவட்டத்தில் உள்ள தேவிப்பட்டினம் அருகில் கண்டி பேச்சம்மா ஆலயத்தில் இருந்து பாப்பிகொன்டலு என்ற சுற்றுலாத் தலத்துக்கு வெள்ளம் கரைபுரண்டு ஓடும் கோதாவரி ஆற்றின் வழியாக 60 இற்கும் அதிகமானவர்கள் தனியாருக்குச் சொந்தமான படகில் கடந்த ஞாயிற்றுக்கிழமை சென்று கொண்டிருந்தனர்.

ஆற்றுச்சுழலில் சிக்கிய அந்த படகு கச்சுலூரு பகுதியின் அருகில் திடீரென்று நிலைதடுமாறி கவிழ்ந்தது. தகவலறிந்து விரைந்து சென்ற மீட்புப்படையினர் ஆற்றுக்குள் மூழ்கி கொண்டிருந்தவர்களில் 23 பேரை உயிருடன் காப்பாற்றினர். மீட்புப்பணிகள் தொடர்ந்து நடைபெற்று வந்தன.

இதற்கிடையே, இந்த விபத்தில் பலியான மேலும் 16 உடல்களை மீட்புக்குழுவினர் நேற்றுமுன்தினம் மீட்டனர்.

இந்தநிலையில், கோதாவரி ஆற்றில் ஏற்பட்ட படகு விபத்தில் சிக்கி பலியானவர்களில் மேலும் 6 பேரின் உடல் மீட்கப்பட்டது. இதையடுத்து, படகு விபத்தில் பலியானோர் எண்ணிக்கை 34 ஆக உயர்ந்துள்ளது. காணாமற்போன 13 பேரை தொடர்ந்து தேடி வருகின்றனர்.

# பீகார் மாநிலத்தில் மின்னல் தாக்கி 18 பேர் பலி

பாட்னா,செப்.20

பீகார் மாநிலத்தில் கனமழை பெய்து வரும் நிலையில், பல்வேறு பகுதிகளில் மின்னல் தாக்கியதில் 18 பேர் உயிரிழந்துள்ளனர்.

பீகார் மாநிலத்தில் தென்மேற்கு பருவமழை சீசனில், பல்வேறு மாவட்டங்களில் தொடர்ந்து கனமழை பெய்தது. இதனால் பல லட்சம் மக்களின் இயல்பு வாழ்க்கை முற்றிலுமாக முடங்கியது. கடந்த செவ்வாய்க்கிழமை முதல் பரவலாக இடி மின்னலுடன் மீண்டும் கனமழை பெய்து வருகிறது.

இந்தநிலையில், இடி மின்னல் தாக்கி 18 பேர் உயிரிழந்திருக்கின்றனர் என மாநில பேரிடர் மேலாண்மை துறை தெரிவித்துள்ளது.

# கடல் எல்லைக்குள் சட்ட விரோதமாக நுழைந்த 161 வடகொரியர்கள் கைது

## ரஷ்ய பாதுகாப்புப் படையினர் அதிரடி




மொஸ்கோ,செப்.20

ரஷ்ய கடல் எல்லைக்குள் சட்ட விரோதமாக நுழைந்து கடல் உயிரினங்களை வேட்டையாடிய 161 வடகொரிய நாட்டினரை பாதுகாப்புப் படையினர் அதிரடியாகக் கைது செய்துள்ளனர்.

அமெரிக்கா உள்பட உலகின் பல நாடுகளை அச்சுறுத்தும் வகை யில் வடகொரியா தொடர்ந்து ஏவுகணை சோதனைகளை அரங்கேற்றி வருகிறது. இதனால் பொருளாதாரத் தடைகளைச் சந்தித்து வருகிறது. பொருளாதார தடை காரணமாக வடகொரியாவைச் சேர்ந்த வர்கள் சிலர் அதிக பணம் ஈட்டுவதற்காக பிற நாட்டு கடல் பகுதிகளில் நுழைந்து சட்ட விரோதமாக மீன் பிடித்தல் போன்ற செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதற்கிடையில், ரஷ்ய எல்லைக்குள் புதன்கிழமை சட்ட விரோதமாக நுழைந்து கடல் உயிரினங்களை வேட்டையாடிக் கொண்டிருந்த வடகொரிய நாட்டினரை ரஷ்ய கடலோர காவல் படையைச் சேர்ந்த வீரர்கள் தடுக்க முற்பட்டனர். அப்போது தாங்கள் மறைத்து வைத்திருந்த ஆயுதங்களை கொண்டு ரஷ்ய கடற் படையினரைத் தாக்கிவிட்டு அவர்கள் உடனடியாக படகுகளில் தப்பிச்சென்றனர்.

இந்தநிலையில், கடலோர காவல் படையினர் தாக்கப்பட்டமையையடுத்து நேற்றுமுன்தினம் ரஷ்யாவின் எல்லை பாதுகாப்புப் படையினர், சிறப்புப் படையினர், கடலோர காவல் படையினர் மற்றும் விமானப் படையினர் என அனைத்து பிரிவினரும் இணைந்து அதிரடி ரோந்து பணியில் ஈடுபட்டனர்.

இந்தத் தேடுதல் வேட்டையின்போது ரஷ்ய எல் லைக்குள் சட்ட விரோதமாக அத்துமீறி நுழைந்து கடல் உயிரினங்களை வேட்டையாடிக் கொண்டிருந்த வடகொரியாவைச் சேர்ந்த 161 வேட்டைக்காரர்களை ரஷ்யப் படையினர் அதிரடியாகக் கைது செய்தனர். மேலும், வேட்டைக்கு பயன்படுத்திய 13 மோட்டார் படகுகளையும் பறிமுதல் செய்தனர்.

# புதிய வகையான ஜெல்லிமீன் பசிபிக் கடலில் கண்டுபிடிப்பு

லண்டன்,செப்.20

பசிபிக் பெருங்கடலின் ஆழ்கடல் பகுதியில் புதிய வகை ஜெல்லி மீனை ஆராய்ச்சியாளர்கள் கண்ட றிந்துள்ளனர்.

பல்வேறு நாடுகளைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் நீர்மூழ்கி வாகனம் மூலம் பசிபிக் பெருங்கடலின் ஆழ் கடல் உயிரினங்களைப் பற்றி ஆராய்ச்சி மேற்கொண் டிருந்தனர்.

அப்போது பூச்சாடி போன்று தோற்றம் கொண்ட புதியவகை ஜெல்லிமீனைக் கண்டனர். மற்ற ஜெல்லி மீன்களை போல குடை போன்று தோற்றம் இல்லாமல் இருந்தது.

சிறிதுநேரத்தில் கூம்பு வடிவில் இருந்த ஜெல்லி மீனின் தோற்றம் பொலித்தீன் தாள் போன்று மாற்றம் பெற்றது. ஜெல்லி மீனின் இத்தகைய உருமாற்றம் அதன் எதிரிகளிடம் இருந்து அதனைக் காப்பாற்றிக் கொள்ள உதவும் என்று கடலடி ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.



## எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை தாக்குதல்:

# வான் பாதுகாப்பை அதிகரிக்க உதவி; தென்கொரியாவிடம் கோருகிறது சவுதி

சவுதி அரேபியாவில் அபெக் மற்றும் குராய்ஸ் என்ற இடத்தில் உள்ள அராம்கோ நிறுவனத்துக்குச் சொந்தமான எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை மற்றும் எண்ணெய் வயலை குறிவைத்து ஹவுதி கிளர்ச்சி யாளர்கள் 10 ஆளில்லா விமானங்கள் மூலம் தாக்கு தல் நடத்தினர். இந்தத் தாக்குதலால் சவுதியில் தினந் தோறும் நடைபெறும் எண்ணெய் உற்பத்தியில் 50 சதவீதம் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் வான் பாது காப்பை அதிகரிப்பதற்காக தென்கொரியாவின் உத வியை சவுதி அரேபிய அரசு நாடி உள்ளது.



இந்தநிலையில், சவுதி இளவரசர் முகமது பின் சல்மான் தென் கொரிய அதிபர் மூன் ஜே இன்னை தொலைபேசியில் தொடர்பு கொண்டு சவுதி நாட்டு வான் எல்லையில் பாதுகாப்பை பலப் படுத்துவது தொடர்பாக ஆலோசனை நடத்தி உள்ளார்.

இந்த உரையாடலின்போது, எண்ணெய் கிடங் குகளில் நடத்தப்பட்ட தாக்குதல்கள் சவுதி அரே பியாவுக்கு மட்டுமல்லாமல் உலக நாடுகளுக்கும் மிகப்பெரிய பாதுகாப்பு அச்சுறுத்தலை ஏற்படுத் தியுள்ளது என்றும் இந்த பிரச்சினையை உலக நாடுகள் இணைந்து தீர்க்கவேண்டும் என்றும் தென் கொரிய அதிபர் தெரிவித்தார்.

இதையடுத்து பேசிய முகமது பின் சல்மான், ஏவுகணை தாக்குதல் உள்பட அனைத்து வித மான வான்வெளி அச்சுறுத்தல்களிலிருந்து சவுதி வான் எல்லைகளை பாது காக்க ஏவுகணை தடுப்பு கவசங்களை தென் கொரியா வழங்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளார். சவுதி அரேபியாவிடம் ஏற்றுமதி செய்யும் மசகு எண்ணெயில் 30 சதவிகிதத்தை தென் கொரியா வாங்குவது குறிப்பிடத்தக்கது.



# லைபீரியா பள்ளியில் ஏற்பட்ட தீ விபத்தில் 28 மாணவர் பலி



மொன்ரோவியா,செப்.20

லைபீரியா நாட்டில் உள்ள பள்ளியில் ஏற்பட்ட தீவிபத் தில் சிக்கி 28 மாணவர்கள் உள்பட 30 பேர் உடல் கருகி பரிதாப மாக பலியாகினர்.



மேற்கு ஆபிரிக்கநாடு களில் ஒன்றான லைபீ ரியாவின் தலைநகர் மொன்ரோவியா. இங் குள்ள பள்ளியில் நேற்று முன்தினம் அதிகாலை திடீரென தீ விபத்து ஏற் பட்டது.

இந்ததீவிபத்தில்சிக்கி 28 மாணவர்கள் மற்றும் 2 ஆசிரியர்கள் உள்பட 30பேர்உடல்கருகிபரிதா பமாக பலியாகினர். மேலும் பலர் படுகாயம் அடைந்தனர்.

தகவலறிந்து சம்பவ இடத்துக்கு விரைந்து வந்த தீய ணைப்பு படையினர் போராடி தீயை அணைத்தனர். காயமடைந்தவர் களை மீட்டு மருத்துவமனையில் சேர்த்தனர்.

பள்ளியில் ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி மாணவர்கள் பலியா னதை அறிந்த அந்நாட்டு அதிபர் ஜோர்ஜ் வே தனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துள்ளார்.

# ஈரான் மீது தாக்குதல் நடக்குமா? டிரம்பின் முடிவு என்ன?



வொஷிங்டன்,செப்.20

ஈரான் எண்ணெய் நிறுவனங்கள் மீது சைபர் தாக்குதல் உட்பட வெவ்வேறு வகையான தாக்குதல்களுக்குரிய திட்டங்களை டிரம்பிடம் ராணுவ தலைவர்கள் வழங்கியதாக தெரிவிக்கப் பட்டு உள்ளது.

சவுதி அரேபியாவின் எண்ணெய் ஆலை மீது நடத்தப் பட்ட தாக்குதலின் பின்னால் ஈரான் இருப்பதாக அமெரிக்கா கூறிவருகிறது. ஆனால் ஈரான் இதனை மறுக்கிறது. இதற்கிடையே சவுதி அரேபியாவில் தாக்குதல் நடத்தியவர்களுக்கு எதிராக பதில் தாக்குதலை நடத்த அமெரிக்க ராணுவம் தயாராக இருப்பதாக டிரம்ப் கூறியி ருந்தார்.

இந்த நிலையில் ஈரானின் எண்ணெய் சுத்தி கரிப்பு ஆலைகள் மற்றும் எண்ணெய் வயல்கள் உள்ளிட்டவற் றின் மீது தாக்குதல் நடத் துவதற்கான திட்டத்தை தயாரித்து அமெரிக்க ராணுவ தலைவர்கள் ஜனாதிபதி டிரம்பிடம் வழங்கினர்.

வெள்ளை மாளிகையில் நடைபெற்ற தேசிய பாதுகாப்பு குறித்த ஆலோசனை கூட்டத்தின் மீது, ஈரான் எண்ணெய் நிறுவனங்கள் மீது சைபர் தாக்குதல், நேரடி ராணுவ தாக்குதல் உள்பட வெவ் வேறு வகையான தாக்குதல்களுக் குரியதிட்டங்களை டிரம்பிடம் ராணு வத் தலைவர்கள் வழங்கியதாக தெரிவிக்கப்பட்டு உள்ளது.

ஆனால், ஈரான் மீது தாக்கு தல்நடத்துவதற்கு டிரம்ப் மறுத்து விட் டார்என வெள்ளை மாளிகை வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின் றன.

இது குறித்து வெள்ளை மாளிகையின் மூத்த அதிகாரி ஒருவர் கூறுகையில், "அமெரிக்கா இனி எந்த நாட்டுடனும் போரில் ஈடுபடாது என மக்களுக்கு அளித்த வாக்குறுதியை காப்பாற்ற டிரம்ப் விரும்புகிறார். அதுமட்டும் இன்றி ஈரா னுடன் போர் ஏற்பட்டால், அது பொருளாதாரத் தில் பெரும் விளைவுகளை ஏற்படுத்திவிடும் என்ற கவலை அவருக்கு உள்ளது" என்றார்.

# நவம்பர் 16 ஜனாதிபதி தேர்தல்:



# அரசியல் தீர்வு கதையை அவிழ்க்கிறார் ரணில்

இலங்கைத்தீவில் பரபரப்பாக பேசப்படும் ஜனாதிபதித் தேர்தல் களத்தில் ஒரு வழியாக- வாராது வந்த மாமணியாக தேர்தல் திகதி நேற்றுமுன்தினம் அறிவிக்கப்பட்டு விட்டது.

இந்த விடயத்தில் இதுவரை பொத்திப் பொத்தி வைத்த திகதியை அவிழ்த்து விட்ட சிறிலங்காவின் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் நவம்பர் 16 ஆம் திகதி இடம்பெறவுள்ளதாக தெரிவித்திருக்கிறார்.

இதற்குரிய சிறப்பு வர்த்தமானி அறிவித்தல்படி, ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பாளர் மனுத்தாக்கல் அடுத்தமாதம் 7ஆம் திகதி இடம்பெற்று வாக்களிப்பு நவம்பர் 16 இல் இடம்பெறவுள்ளது

அப்பாடா ஒரு வழியாக தேர்தல் திகதி வந்துவிட்டது! இனியென ஆஹா ஓஹோ என எதிர்பாராத சில வாக்குறுதிகளை இன்றும் தீவிரமாக கேட்கும் பாக்கியதை மஹாகனம் பொருந்திய மக்களுக்கு கிட்டிவிடக்கூடும்.

மஹா கனம் பொருந்திய மக்கள் என்ற இந்த அடைமொழி ஏதோ கேலிக்குரிய அடைமொழி அல்ல. மக்களாட்சித்தத்துவத்தின்படி மக்களே எஜமானர்கள் என்பதால் இது யதார்த்தமானதுதான்.

ஆனால் அவ்வாறான பெறுமதியுடைய மக்களுக்கு அரசியல்வாதிகள் வழங்கும் உறுதிமொழிகள் எவ்வளவு தூரம் துரிதமாக மல்லினப்படுத்தப்படுகின்றன என்பதற்கு அதே உறுதிமொழிகள் மீண்டும் மீண்டும் வழங்கப்படும் சந்தர்ப்பங்கள் உறுதிப்படுத்திவிடுகின்றன.

அந்தவகையில் தேர்தல் திகதி அறிவிக்கப்பட்ட நிலையில் இலங்கை மக்களுக்கு இரண்டு உறுதிமொழிகள் இப்போது நினைவூட்டப்பட்டுள்ளன. ஒன்று தமிழர்களுக்குரிய தீர்வு குறித்தது இரண்டாவது நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறை பிடுங்கல் பற்றியது.


முதலாவது விடயத்தை ரணில் பேசியிருக்கிறார். இரண்டாவது விடயத்தை கரு ஜயசூரிய பலமாக கூறியுள்ளார்.

தனது தலைமையில் மீண்டும் ஒரு அரசாங்கமொன்று அமையுமாயின் ஒரு வருடகாலத்துக்குள் அலிபாபா கதையில் வருதைபோல, அண்டா கா கசம் அபூகா ஹகும் திறந்திடு சீசேம் பாணியில் தமிழர் களுக்கு அரசியல் தீர்வை முன்வைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என சிறிலங்காப்பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் உறுதிமொழி வந்துள்ளது.

இந்த உறுதிமொழியை தமிழ்த் தேசிய கூட்டமைப்புடனான கடந்த செவ்வாய்க்கிழமை (17 ஆம் திகதி சந்திப்பின்போது ரணில் வெளியிட்டார். ஏற்கனவே இவ்வாறாக 2015 இன் நல்லாட்சியால் வழங்கப்பட்டுள்ள உறுதி மொழியில் நம்பி - கைவைத்து கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனும் தமிழர்களுக்கு 2016 பொங்கலுக்குள் தீபாவளிக்குள் அரசியல் தீர்வு வந்துவிடுமென சொன்னார்.

ஆனால் இறுதியில் இவை யாவும் நிறைவேறாதமை கண்டு தமிழர்கள் எரிச்சலில் பொங்கியமைதான் மிச்சம்!

ஆயினும் சற்றும் தளராத ரணில் விக்கிரமாதித்தரோ மீண்டும் தேர்தல் ஆதாய மரத்தில் ஏறி ஒரு வருடகாலத்துக்குள் தமிழர்களுக்கு அரசியல் தீர்வை முன்வைப்பதற்கான முயற்சி என்ற வேதாளத்தை இரா.சம்பந்தனின் பைக்குள்ளே போட்டுள்ளார். அதுவும் ஒரு வருடத்தில் அரசியல் தீர்வு அல்ல மாறாக அதனை முன்வைப்பதற்கான முயற்சி என மட்டும் ரணில் கூறியிருப்பதை நன்றாக அவதானிக்க வேண்டும்.





ரணிலின் இந்த உறுதிமொழியில் சில மாங்காய் அடிப்புக்கள் உள்ளன.

குறிப்பாக சஜித் பிரேமதாசாவுக்குரிய வேகத்தடையைப் போடக்கூடிய சிறுபான்மை வாக்கு வங்கியின் முக்கிய ஒரு சறுக்குக் கட்டையாக அவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை நோக்கிக்கொள்வது அதன் மூலம் வெளிப்படுகிறது

தன்னை மீறிய செல்வாக்கு சஜித்துக்கு சென்று விடக்கூடாது என்பதால் தமிழ்பேசும் தனது பங்காளிக்கட்சிகளை வைத்து இந்தத் திட்டத்தை கச்சிதமாகக் கையாள ரணில் முனைவது தெரிகிறது.

இதனால்தான் இனப்பிரச்சினைக்குரிய தீர்வு என்ன என்ற விடயத்தில் சஜித்தெளிவாக கூட்டமைப்புக்கு ஏதும் கூறாத நிலையில் ஒருவருட கால அவகாசம் வைத்து கூட்டமைப்புக்கு ரணில் கடந்த செவ்வாய்க்கிழமை கூறியுள்ளார்.

அதாவது தமிழ்பேசும் கட்சிகளின் அபிலாஷைகளை நிறைவேற்ற சஜித் தயங்கினாலும் நான் ரெடி எனக்கூறும் ரணில் அதன் ஊடாக யானையின் வேட்பாளராக சஜித்தா கரு ஜெயசூரியவா இல்லை நானே நானா என்றவிடயத்தில் கூட்டமைப்பு ஒரு தெரிவை எடுக்கும் வகையில் நிலைமையை மாற்றியுள்ளார்

ஆகமொத்தம் கூட்டணிக்கட்சிகளின் உறவை வைத்துரணில் சஜித்துக்கு பொறிவைக்க முனைந்தாலும் இந்தப்பொறி ரணிலையும் பூமராங் தடியாகத் தாக்கக்கூடியது என்பதுதான் இங்கு விசயமே.

இப்போது இரண்டாவது விடயமான நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறை ஒழிப்புக் குறித்துப்பார்க்கலாம். இலங்கைத்தீவுக்கு 1978ஆம் ஆண்டு நிறைவேற்று அதிகார அரச தலைவர் முறையை அறிமுகம் செய்த அரசியல் குள்ளநரி புண்ணியவான் ஜே. ஆர்.ஜெயவர்த்தனாவுக்கு கடந்த செவ்வாய்க்கிழமை 113 வது பிறந்தநாள்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதமராக அன்று இருந்த ஜே.ஆர். நிறைவேற்று அதிகார முறையை அறிமுகம் செய்த போது, அதன் ஊடாக பெண்ணை ஆணாக அல்லது ஆணைப்பெண்ணாக மட்டுமே தன்னால் மாற்ற முடியாது. ஆனால் ஏனைய அனைத்தையும் தன்னால் செய்ய முடியும் என எள்ளலாகச் சொன்னார்.

அப்போது சிறிமாவோ பண்டாரநாயக்க தலைமையில் எதிர்க்கட்சியாக இருந்த சிறிலங்கா சுதந்திரக்கட்சி இந்தஅதிகார முறைக்கு கடும் எதிர்ப்பை வெளியிட்டது.

ஆனால் சிறிமா பண்டாரநாயக்க எதிர்த்த அதேமுறையில் அவரது வாரிசான சந்திரிகாவும் ஆட்சி செலுத்தி அதனை அகற்றாமல் கடந்து சென்றதே நடந்தது. எனினும் இந்த நிறைவேற்று ஆட்சிக் கணகணப்பு கிட்டமுன்னர் 94 இல் அரச தலைவர் தேர்தல்களத்தில் ஒரு வேட்பாளராக களமிறங்கிய சந்திரிகா சொன்னது வேறு.

நிறைவேற்று அதிகாரம் மீளெடுக்கப்படும் என்ற வாக்குறுதியை முதன்முறையாக வழங்கிய சந்திரிகா அதற்கும் ஒரு படிமேலே போய் நிறைவேற்று அதிகாரம் இல்லாதொழிக்கப்படும் என எழுத்துவடிவில் கூட பிரகடனம் செய்தார்.

ஆனால் அந்த 94 தேர்தலில் வெற்றி பெற்ற சந்திரிகா, 2000 ஆண்டு வரை இரண்டு முறை ஜனாதிபதியாகப் பதவி வகித்த போதிலும் நிறைவேற்று முறையைஅசைக்கவில்லை. அதற்குப் பின்னர் 2005 இல் களமிறங்கிய மஹிந்த ராஜபக்ஷ இந்த முறையை மீளெடுப்பதாக கூறி போட்டியிட்டார். அவரும் இரண்டு முறை பதவி வகித்தபோதிலும், நிறைவேற்று அதிகார முறையை இல்லாதொழிக்கவில்லை.

அதற்குப்பதிலாக 18ஆவது திருத்தச் சட்டத்தைக் கொண்டுவந்த மஹிந்த, இரண்டு முறை மட்டுமே ஒருவர் அரசதேர்தலில் போட்டியிடலாம் என்ற வரையறையை நீக்கி, ஒருவர் எத்தனை முறை வேண்டுமானாலும் போட்டியிடலாம் என்ற மாற்றத்தை புகுத்தினார். இவ் வளவும் ஜே. ஆரின் நிறைவேற்று அதிகாரம் சம்பந்தப்பட்டது

இப்போது தனக்குரிய 113 வது பிறந்த நாளை தனது கட்சிவாரிசுகள் கொழும்பில் உள்ள

## அவரின் 'வேதாளக் கதை'யை நம்புவாரா சம்பந்தன் ஐயா?

ஜயவர்த்தனா மையத்தில் நினைவு கூர்ந்தபோது நிகழ்வில் அதில் விளக்குக் கொளுத்திய முக்கிய முகமான கருஜெயசூரியாவும் தான் ஜனாதிபதியாக வந்தால் நிறைவேற்று அதிகாரமுறையை ஒழிப்பதே தனது முதல் வேலை என சொல்வதைக் கேட்டு கடுப்பாகியிருப்பார்.

ஆனால் இவ்வாறு ஏற்கனவே நிறைவேற்று அதிகாரமுறையை ஒழிப்பதே தமது முதல் வேலை எனக்கூறிப்பதவியில் இருந்தவர்கள் அந்த அதிகார முறையை முடிவுக்குக் கொண்டுவரவில்லை என்பதே வழமை.

ஆகமொத்தம் நிறைவேற்று அதிகார முறையை ஒழிக்கும் தேர்தல் காலக் கதையும் பேச்சுப்பல்லக்கு தம்பி கால்நடைதான். *

# கஞ்சிபானவிடம் குரல் பரிசோதனை

கொழும்பு, செப். 20

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பாதாள உலகக்குழு உறுப்பினரான கஞ்சிபான இம்ரான், அரச இரசாயன பகுப்பாய்வாளர் திணைக்களத்துக்கு நேற்று அழைத்துச் செல்லப்பட்டார்.

அலைபேசியில் பொலிஸ் அதிகாரிகளுக்கு அச்சுறுத்தல் விடுத்தமை தொடர்பில் முன்னெடுக்கப்பட்டுள்ள விசாரணைகளுக்கு அமைய குரல் பரிசோதனை மேற்கொள்வதற்காகவே அவர் அங்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

வெளிநாடு ஒன்றில் இருந்து பொலிஸ் அதிகாரிகள் இருவருக்கு கொலை மிரட்டல் விடுத்த குற்றச்சாட்டில் தற்போது சிறைவாசம் அனுபவித்து வருகின்றார்.

கஞ்சிபான இம்ரானை, குரல் பதிவுக்காக அரச இரசாயனப் பகுப்பாய்வாளர் திணைக்களத்தில் நேற்று முன்னிலைபடுத்துமாறு கொழும்பு பிரதம நீதிவான் நீதிமன்றம் கடந்த 17 ஆம் திகதி உத்தரவிட்டிருந்தது.

அத்துடன், கஞ்சிபான இம்ரானை எதிர்வரும் 20ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும் நீதிவான் உத்தரவிட்டிருந்தார். (ஐ)

# ஊடகவியலாளருக்கு ரி.ஐ.டியினர் அழைப்பு

கொழும்பு, செப். 20

முல்லைத்தீவு மாவட்டப் பிராந்திய ஊடகவியலாளர் சண்முகம் தவசீலனுக்கு, பயங்கரவாத விசாரணைப் பிரிவால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கடிதம், பொலிஸார் ஊடாக ஊடகவியலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

பயங்கரவாத விசாரணைப் பிரிவால் முன்னெடுக்கப்படும் விசாரணையொன்று தொடர்பில் வாக்குமூலம் பெறுவதற்கே அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக, அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கமைய, செப்ரெம்பர் 25ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு பயங்கரவாத விசாரணைப் பிரிவு 2ஆம் மாடியில், ஆஜராகுமாறும், அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

# மைத்திரியை வேட்பாளராக நிறுத்துவோம்!

## கூறுகிறார் மஹிந்த அமரவீர

கொழும்பு, செப். 20

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் நடத்தும் பேச்சு தோல்வியடைந்தால், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வேட்பாளராக நிறுத்தும் என ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.



பொதுஜன பெரமுனவுடன் இணைவதா? இல்லையா? என்பது தொடர்பில் ஒரு வாரத்துக்குள் இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் எனத் தெரிவித்த அவர், தற்போது அதற்கான பேச்சு இடம்பெற்று வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் விசேட செய்தியாளர் மாநாடு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் இடம்பெற்றது. இங்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஏற்கனவே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழு கூடி ஜனாதிபதி வேட்பாளராக மைத்திரிபால சிறிசேனவை நிறுத்துவதென தீர்மானித்துள்ளது. சின்னம் ஒரு பிரச்சினையல்ல. வேட்பாளரை வெற்றி பெறச் செய்வதே எமது நோக்கமாகும். அந்தவகையில் பேச்சு வெற்றி பெறும் என்ற நம்பிக்கை எமக்குள்ளது. எனினும் பேச்சு தோல்வியடைந்தால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அதன் வேட்பாளரை நிறுத்தும்.

மேலும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஐக்கிய தேசியக்கட்சிக்கு ஆதரவளிக்கப்போவதில்லை. இரு கட்சிகளுக்குமிடையிலான பேச்சுகள் கொள்கையளவில் இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளன. சின்னம் தொடர்பிலேயே தொடர்ந்தும் பேச்சு இடம்பெற்று வருகிறது – என்றார்.

செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்ட ஊடகவியலாளர்கள் தாமரைக் கோபுர அங்குரார்ப்பண விழாவில் ஜனாதிபதி தெரிவித்த கூற்று இரு கட்சிகளினதும் இணக்கத்துக்கான பேச்சுக்கு தடையாக அமையுமா? எனக் கேள்வி எழுப்பினர்.

இதற்குப் பதிலளித்த மஹிந்த அமரவீர, ஒருபோதும் அந்தக் கூற்று தடையாக அமையாது. எல்லா அரச காலத்திலும் அதிகாரிகளினால் மோசடிகள் இடம்பெற்றன. குறிப்பாக இந்த அரசின் காலத்தில் பிணைமுறி மோசடி தொடர்பில் அர்ஜுன மகேந்திரனின் மோசடியைக் குறிப்பிட முடியும். அதிகாரிகள் மோசடிகளில் ஈடுபட்டால் அதனை வெளிப்படுத்துவதும் விசாரணை செய்வதும் இயல்பானது – என்றார். (ஐ)

# 15 குளங்களை சீரமைக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், செப். 20

ஒவ்வொரு மாவட்டத்திலும் மூன்று குளங்கள் என்ற அடிப்படையில் வடக்கு மாகாணத்தில் 15 குளங்களைப் புனரமைப்புச் செய்வதற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் தலைமையில் ஆளுநரின் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது இந்த முடிவு எடுக்கப்பட்டது.

தேசிய கொள்கைகள், பொருளாதார விவகாரங்கள், மீள்குடியேற்றம் மற்றும் மறுவாழ்வு, வடமாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சால் ஒரு கோடி 16 இலட்சம் ரூபா நிதி இந்த சீரமைப்புக்காக முதல் கட்டமாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (ஐ)

# விபத்தில் சிறுவன் சாவு!

மட்டக்களப்பு, செப். 20

மட்டக்களப்பு – மகிழூர் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் காயமடைந்த சிறுவன் நேற்றுமுன்தினம் காலை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை நண்பருடன் மோட்டார் சைக்கிளில் சென்றபோது மின்கம்பத்தில் மோதுண்டு படுகாயமடைந்த நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த பெரியகல்லாறு, காளி கோவில் வீதியை சேர்ந்த ஜெ.கேதுசன் (வயது – 13) என்னும் சிறுவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சடலம் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டு பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

# கம்போடிய தமிழ்க் கவிஞர் மாநாட்டில் கௌரவிக்கப்படவுள்ள மேழிக்குமரன்

கம்போடிய அரசின் கலை கலாசாரத் துறை,கம்போடிய அங்கோர் தமிழ்ச் சங்கம்,பன்னாட்டுத் தமிழர் நடுவம், கம்போடிய சீனு ஞானம் டிராவல்ஸ் ஆகியோர் இணைந்து நடத்தும் உலகத் தமிழ்க் கவிஞர் மாநாடு நாளையும் நாளை மறுதினமும் கம்போடியா சியாம் ரீப் நகரில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் இந்தியா, இலங்கை, சிங்கப்பூர், மலேசியா, ஐரோப்பா, கனடா, அமெரிக்கா, நியூசிலாந்து, ஆஸ்திரேலியா என சர்வதேசமெங்கிருந்து கவிஞர்கள் கம்போடியாவில் ஒன்று கூடவுள்ளனர்.

உலகெங்கும் வாழும் கவிஞர்கள் ஒன்றிணையும் கவிப் பெருவிழாவாக இம்மாநாடு நடைபெறஉள்ளது. இம்மாநாட்டில் கலந்து கொள்வதற்காக வவுனியா தமிழ்ச் சங்கத்தின் செயற்குழு உறுப்பினரும் எழுத்தாளரும், கவிஞருமான கலாபூசணம். தமிழ்மணி.மேழிக்குமரன் கம்போடியா சென்றுள்ளார்.



அங்கு நடைபெறும் கவியரங்கிலும் மேழிக்குமரன் பங்கேற்கவுள்ளார்.

மேலும் இவர் இலக்கியத் துறைக்காக ஆற்றிவரும் சேவையினைப் பாராட்டி கம்போடிய அரசு இவருக்கு விருது வழங்கிக் கௌரவிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# புதுக்குடியிருப்புப் பிரதேச சபை உறுப்பினர் விபத்தில் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், செப். 20

கொடிகாமம் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் புதுக்குடியிருப்புப் பிரதேச சபை உறுப்பினர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை இடம்பெற்றது. விபத்தில் படுகாயமடைந்த பிரதேச சபை உறுப்பினரை வைத்தியசாலையில் அனுமதித்தபோதிலும் அவர் சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்துள்ளார்.

புதுக்குடியிருப்பைச் சேர்ந்த பிரதேச சபை உறுப்பினரான ஏரம்பு இரத்தினவடிவேல் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# வெள்ளை வானில் வர்த்தகர் கடத்தல்!

உருபொக்க பிரதேசத்தில் வெள்ளை வாகனத்தில் வந்தவர்களால் வர்த்தகர் ஒருவர் கடத்தப்பட்டுள்ளார். நேற்றுக் காலை 6.30 மணியளவில் கடத்தல் இடம்பெற்றது.

பெரலபநாதர பகுதியைச் சேர்ந்த சுரங்கா லக்மல் எதிரிசிங்க என்பவரே கடத்தப்பட்டுள்ளார்.

இலக்கத்தகடுகள் இல்லாத இரண்டு வெள்ளை வான்களில் வந்த ஒரு குழுவினரால் தொழிலதிபர் கடத்தப்பட்டார். (ஐ)







# கோப் தலைமையிடம் மன்னிப்பு கோரிய இலங்கை கிரிக்கெட் சபை

இலங்கை கிரிக்கெட் நிர்வாக சபையில் ஊழல் குறித்த கோப் குழுவின் விசாரணைகளுக்கு வருகை தராமை குறித்து இலங்கை கிரிக்கெட் சபை அதிகாரிகள் கோப் தலைமையிடம் மன்னிப்புக் கோரினர்.

கடந்த செப்ரெம்பர் 3 ஆம் திகதி கோப் குழு முன்னிலையில் விசாரணைகளுக்காக வரும்படி இலங்கை கிரிக்கெட் சபைக்கு பணிப்பு விடுத்தும் அதன் தலைவர் உள்ளிட்ட முக்கிய உறுப்பினர்கள் வருகை தரவில்லை.

இந்நிலையில் நேற்று இலங்கைக் கிரிக்கெட் சபை தலைவர் சம்மி சில்வா, பொருளாளர் லலித் ரம்புக்வெல, பிரதம நிறைவேற்று அதிகாரி அஷ்லி டி சில்வா, செயலாளர் மொஹான் டி சில்வா மற்றும் உப தலைவர் ரவீன் விக்ரமரத்ன ஆகியோர் கோப் குழுவில் விசாரணைகளுக்காக கலந்துகொண்டனர்.

கடந்த செப்ரெம்பர் 3 ஆம் திகதி கோப் குழுவுக்கு இவர்களுக்கு அழைப்பு விடுத்தும் அவர்களின் தனிப்பட்ட காரணிகளுக்காக வருகை தராத நிலையில் நேற்று அது குறித்து குழுவின் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

எனினும் ஆசிய கிரிக்கெட் சபைக் கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டியமையால் தம்மால் வருகை தர முடியாது போய்விட்டது என தலைவர் சம்மி சில்வா தெளிவுபடுத்தினார். பொருளாளர் தனக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தால் வர முடியவில்லை எனவும், பிரதம நிறைவேற்று அதிகாரி அஷ்லி டி சில்வா தான் இலங்கை – நியூசிலாந்து போட்டி கண்காணிப்புக்காகச் சென்றார்கள் எனவும், லலித் ரம்புக்வெல்லவிற்கு சுகவீனம் ஏற்பட்டது எனவும் காரணிகளை முன்வைத்தனர்.

எனினும் காரணங்களை எழுத்து மூலமாக சபைக்குச் சமர்ப்பிக்க வேண்டும் என்பதுடன் நீங்கள் மன்னிப்புக் கேட்பதால் விசாரணைகளில் இருந்து தப்பிக்க முடியாது. வேறு ஒரு நாளில் விசாரணைகளுக்கு வரவேண்டும் எனவும் கோப் தலைவர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்தார். (ஐ)

# இந்திய வீரருக்கு பாராட்டு தெரிவித்த சயிட் அப்ரிடி



பாகிஸ்தான் முன்னாள் அதிரடி துடுப்பாட்ட வீரர் சயிட் அப்ரிடி இந்திய வீரர் ஒருவருக்கு தனது டுவிட்டர் பக்கத்தில் பாராட்டுகளைத் தெரிவித்துள்ளார்.

விராட் கோஹ்லிக்கு எனது பாராட்டுக்கள், உண்மையிலேயே அவர் ஒரு சிறந்த வீரர் ஆவார். அவர் தொடர்ந்து வெற்றி பெற வாழ்த்துக்கள். உலகம் முழுவதும் உள்ள ரசிகர்களுக்கு தனது அபாரமான ஆட்டம் மூலம் மகிழ்ச்சியை ஏற்படுத்துகிறார் என்று கூறியுள்ளார்.

கோஹ்லி மீண்டும் அனைத்து வகையான சர்வதேசப் போட்டிகளிலும் 50 ஓட்டங்களுக்கு மேல் சராசரியைத் தொட்டுள்ளார். டெஸ்டில் 53.14, ஒரு நாள் போட்டி 60.31, 20 ஓவரில் 50.85 ஆக சராசரி இருக்கிறது. (ஐ)



# பெரியபண்டிவிரிச்சான் வள்ளுவர் அணி வெற்றி

மன்னார் மாவட்ட உதைபாந்தாட்ட சம்மேளனத்தினால் நடத்தப்படும் எடிசன் வெற்றிக் கிண்ண சுற்றுப்போட்டியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் நெடுங்கண்டல் அன்ரனீஸ் அணியை எதிர்த்து பெரிய பண்டிவிரிச்சான் வள்ளுவர் அணி மோதியது.

இவ் ஆட்டத்தில் 01:00 என்ற கோல் கணக்கில் வள்ளுவர் அணி வெற்றி பெற்றது. வள்ளுவர் அணி சார்பாக றிஷி ஒரு கோலைப் பெற்றுக் கொடுத்தார்.

# ஏழு ஓட்டத்தால் ரோகித் சர்மாவை பின்னுக்கு தள்ளிய கோஹ்லி!



சர்வதேச இருபதுக்கு – 20 கிரிக்கெட் அரங்கில் இந்திய அணித் தலைவர் விராட் கோஹ்லி அதிக ஓட்டங்களைக் குவித்த வீரர் என்ற சாதனையை படைத்துள்ளார்.

தென்னாபிரிக்க அணிக்கு எதிராக நேற்று முன் தினம் மொஹாலியில் இடம்பெற்ற இருபதுக்கு – 20 கிரிக்கெட் போட்டியிலேயே அவர் இந்த சாதனையை பதிவுசெய்துள்ளார்.

நேற்று முன் தினம் ஆட்டம் ஆரம்பமாவதற்கு முன்னர் இந்திய அணியின் துணைத் தலைவர் ரோகித் சர்மா இருபதுக்கு – 20 கிரிக்கெட் அரங்கில் மொத்தமாக 88 இன்னிங்ஸுக்களை எதிர்கொண்டு 2,422 ஓட்டத்துடன் அதிக ஓட்டங்களைக் குவித்த வீரர் பட்டியலில் முதல் இடத்தி இருந்தார்.

அதேநேரம் விராட் கோஹ்லி மொத்தமாக 65 இன்னிங்ஸுக்களை எதிர்கொண்டு 2,369 ஓட்டத்துடன் இரண்டாவது இடத்தில் இருந்தார்.

இந் நிலையில் நேற்று முன் தினம் போட்டியில் ரோகித் சர்மா 12 ஓட்டங்களை மாத்திரம் பெற்றார். இதனால் அவரின் ஓட்ட எண்ணிக்கை 2,434 ஆக அதிகரித்தது. மறுமுனையில் விராட் கோலி 52 பந்துகளை எதிர்கொண்டு 3 ஆறு ஓட்டம், 4 நான்கு ஓட்டம் அடங்கலாக 72 ஓட்டங்களைக் குவித்தார். இதனால் அவரின் ஓட்ட எண்ணிக்கை 2,441 ஆக அதிகரித்தது.

இதன் மூலம் 7 ஓட்டங்கள் வித்தியாசத்தில் விராட் கோஹ்லி ரோகித் சர்மாவை பின்னுக்குத் தள்ளி சர்வதேச இருபதுக்கு – 20 போட்டிகளில் அதிக ஓட்டங்களைக் குவித்த வீரர் என்ற பெருமையைப் பெற்றார்.

அதேநேரம் இந்த ஆண்டு அனைத்து வகையான சர்வதேச கிரிக்கெட் போட்டிகளிலும் 50 இற்கும் மேற்பட்ட சராசரியை பதிவு செய்த வீரர் என்ற பெருமையையும் அவர் பெற்றார்.

டெஸ்ட் கிரிக்கெட்டில் 53.14, ஒருநாள் கிரிக்கெட்டில் 60.31 மற்றும் இருபதுக்கு – 20 கிரிக்கெட்டில் 50.85 என்ற சராசரியையும் பதிவு செய்துள்ளார். (ஐ)

## வழமைக்குத் திரும்பின இ.போ.ச. பஸ் சேவைகள்

கொழும்பு, செப். 20

இலங்கைப் போக்குவரத்துச் சபை ஊழியர்களின் பணிப் பகிஷ்கரிப்பு போராட்டம் நிறைவுக்கு வந்துள்ளது.

கொழும்பில் போக்குவரத்து அமைச்சில் இடம்பெற்ற பேச்சை அடுத்து இந்தப் போராட்டம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

இதனையடுத்து நேற்றுக் காலை முதல் நாடு முழுவதும் இ.போ.ச. பஸ் சேவைகள் வழமைபோன்று முன்னெடுக்கப்பட்டன.

சம்பளப் பிரச்சினை, பதவி உயர், தற்காலிக ஊழியர்கள் நிரந்தர நியமனம் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து இலங்கைப் போக்குவரத்து சபை ஊழியர்கள் நாடளாவிய ரீதியில் கடந்த திங்கட்கிழமை முதல் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# வடக்கு விஜயத்தை கைவிட்டார் சஜித்!

## காரணம் உடன் தெரியவில்லை



கொழும்பு, செப். 20

அமைச்சர் சஜித் பிரேமதாஸ வடக்குக்கு மேற்கொள்ளவிருந்த விஜயம் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக அமைச்சினால் அறிவிக்கப்பட்டுள்ளது. ஆயினும் அதற்கான காரணம் கூறப்படவில்லை.

அமைச்சர் சஜித் பிரேமதாஸ எதிர்வரும் திங்கட்கிழமை வடக்குக்கு விஜயம் செய்வார் எனத் தெரிவிக்கப்பட்டது.

அமைச்சரின் விஜயத்தை முன்னிட்டு சாவகச்சேரி, கிளிநொச்சி மற்றும் மன்னார் தேசியப் பாடசாலைகளுக்கு வீடமைப்பு மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் நிதியொதுக்கீட்டின் கீழ் மூன்று பஸ்கள் வழங்கும் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக அமைச்சர் சஜித் பிரேமதாஸ கலந்து கொண்டு பஸ்களை பாடசாலை நிர்வாகங்களிடம் கையளிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

இந்நிலையில், இந்த பயணம் இரத்து செய்யப்படுவதாகவும், அந்த நிகழ்வு பிற்போடப்பட்டுள்ளதாகவும் நேற்று வீடமைப்பு அமைச்சினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

## எம்.பிக்களின் கொடுப்பனவு இடைநிறுத்தம்!

கொழும்பு, செப். 20

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குவழங்கப்படவிருந்த இரண்டு இலட்சம் ரூபா மேலதிகக் கொடுப்பனவு இடைநிறுத்தப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆலோசனைக்கு அமைய இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

குருநாகலில் ஆயிரத்து 492 பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கும் நிகழ்வில் பங்கேற்று உரையாற்றியபோதே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை அடிப்படையாகக் கொண்டு பணிப்பகிஷ்கரிப்புகளும் ஆர்ப்பாட்டங்களும் பல்வேறு தரப்பினராலும் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் ஜனாதிபதியினால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார். (ஐ)

# மாகாணத் தேர்தல் நடத்தப்படாமை குறித்து தமிழ்த் தலைமைகள் குரல் கொடுக்கவில்லை

## யாழ். வந்த பிரசன்ன ரணதுங்க எம்.பி. காட்டம்



(எஸ். நிதர்ஷன்)

வடக்கில் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படாமை குறித்து தமிழ்த் தலைமைகள் நாடாளுமன்றத்தில் எந்தவொரு எதிர்ப்பையும் வெளியிடாமல் மௌனமாக இருக்கின்றன என நாடாளுமன்ற உறுப்பினர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

வடக்கு பகுதியில் பல வருடங்களுக்குப் பின்னர் ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற்கு மாகாண சபைத் தேர்தல் மஹிந்த ஆட்சி காலத்தில் நடத்தப்பட்டது.

விசேடமாக வடக்கிலுள்ள பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுக்கொடுக்க வந்த மாகாண சபையின் காலம் நிறைவடைந்து பல மாதங்கள் கடந்துள்ள நிலையில் தேர்தலை நடத்தாமல் அரசு உள்ளது.

ஆனால், இவ்விடயம் குறித்து தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள், நாடாளுமன்றத்தில் எந்தவொரு கருத்தையும் வெளியிடாமல் அமைதியாக இருக்கின்றமை கவலையளிக்கிறது.

ஆகையால் நாம் உறுதியளிக்கின்றோம், யாழ்.மக்களின் எதிர்பார்ப்பான மாகாண சபைத் தேர்தலை மீண்டும் நடத்த நடவடிக்கை மேற்கொள்வோம்.

வடக்கு மக்களின் பாதுகாப்பு, கல்வி மற்றும் இளைஞர்களின் வேலையில்லாப் பிரச்சினை ஆகியவற்றுக்கும் தீர்வை பெற்றுக் கொடுக்கவும் நாட்டைச் சிறந்த முறையில் கட்டியெழுப்பவும் கோட்டாபய ராஜபக்ஷவால் மட்டுமே முடியும்.

வடக்கு மக்களுக்குச் சேவையாற்றிய மஹிந்தவுடன் இணைந்து மேலும் சிறந்த வேலைத்திட்டங்களை முன்னெடுப்போம்.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார வீழ்ச்சி, கொள்ளைச் சம்பவம், போதைப்பொருள் பாவனை ஆகியவற்றுக்கு, மலரும் எமது புதிய ஆட்சியில் நல்லதொரு தீர்வொன்று பெற்றுக் கொடுக்கப்படும் – என்றார். (ஐ -07)

## ரயில்வே ஊழியர் நேற்று முதல் வேலைநிறுத்தம்

கொழும்பு, செப். 20

ரயில் சேவை ஊழியர்கள் நேற்று நள்ளிரவு முதல் சுழற்சி முறையிலான பணிபகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

நேற்று பிற்பகல் கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர்கள் இதனைத் தெரிவித்தனர்.

சம்பள பிரச்சினைகள் மற்றும் பிற கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிட்டால் அடுத்த செவ்வாய்க்கிழமை காலவரையற்ற வேலைநிறுத்த நடவடிக்கையை மேற்கொள்ளவுள்ளதாக அவர்கள் அறிவித்துள்ளனர். (ஐ)

# மினுவாங்கொடையில் மும்மொழி பாடசாலை

கொழும்பு, செப். 20

'அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை' என்ற வேலைத்திட்டத்தின் கீழ், கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசத்தால் முன்னெடுக்கப்படும் பல்வேறு வேலைத்திட்டங்களின் மற்றுமொரு அம்சமாக, புதிய மும்மொழி பாடசாலைக்கான அடிக்கல் நடும் நிகழ்வு, இன்று மீரிகம பகுதியில் இடம்பெறவுள்ளது.

இதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இடம்பெறவுள்ளது.

சுதந்திர இலங்கையின் முதல் பிரதமரான டீ.எஸ். சேனாநாயக்கவுக்கு கௌரவமளிக்கும் வகையில், 'தொன் ஸ்டீபன்' எனப் இந்தப் பாடசாலை பெயரிடப்படவுள்ளது.

இந்தப் பாடசாலையானது, மினுவாங்கொட கல்வி வலயத்தின் கீழ் நிர்மாணிக்கப்படும் மும்மொழி பாடசாலையாக விளங்குகிறது. (ஐ)

# ஐஸ் போதைப்பொருளுடன் இந்தியப் பிரஜை சிக்கினார்

கொழும்பு, செப். 20

ஐஸ் போதைப்பொருளை, இந்தியாவிலிருந்து இலங்கைக்கு எடுத்து வந்த இந்தியப் பிரஜையொருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டார்.

விமான நிலையத்திலிருந்து இந்த நபர் வெளியேறும்போது, அவர் மீது சந்தேகம் கொண்ட சுங்கப் பிரிவினர், அவரது பயணப் பொதியை சோதனையிட்டபோதே, 864.215 கிராம் நிறையுடைய, ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது. 29 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். (ஐ)



# மன்னாரில் இரும்புக்கடை ஒன்று தீ விபத்தினால் முற்றாக கருகியது



மன்னார், செப். 20

மன்னார் உப்புக்குளம் வடக்கு பகுதியில் அமைந்துள்ள ஹாட்வெயார் விற்பனை நிலையத்தில் ஏற்பட்ட திடீர்த் தீ விபத்தில், பல இலட்சம் ரூபா பெறுமதியான சொத்துக்கள் எரிந்து நாசமாகியுள்ளன.

இந்த விற்பனை நிலையம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இரவு வழமை போன்று மூடப்பட்டது. இந்நிலையில் இரவு 11 மணியவில் விற்பனை நிலையத்தின் உட்பகுதியில் தீ பரவல் ஏற்பட்டது.

இதனை அவதானித்த அயலவர்கள் தீயை அணைக்க நடவடிக்கை எடுத்ததோடு, மன்னார் பொலிஸ் மற்றும் நகர சபைக்கும் அறிவித்தனர்.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த மன்னார் நகரசபை ஊழியர்கள் பௌசர் மூலம் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர்.

எனினும் அந்த விற்பனை நிலையம் முழுமையாக எரிந்துள்ளதுடன், பல இலட்சம் ரூபா பெறுமதியான சொத்துக்கள் எரிந்து நாசமாகியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தீ எவ்வாறு ஏற்பட்டது என்பது தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, மன்னார் மாவட்டத்தில் தற்போது வரை 3இற்கும் மேற்பட்ட பெரிய தீ விபத்துக்கள் இடம் பெற்றபோதும் தீயணைப்பு வாகனம் இல்லாமையினால் தீயைக் கட்டுப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

எனவே மன்னார் மாவட்டத்திற்கு தீயணைப்பு வாகனம் ஒன்றை பெற்றுத்தர அமைச்சர், நாடாளுமன்றஉறுப்பினர்கள்உரியநடவடிக்கைஎடுக்கவேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ)



## ஜனாதிபதி சொன்னதில் தவறிருந்தால் அதற்கு அதிகாரிகளே முழுக் காரணம்

### மஹிந்த அமரவீரவின் குற்றச்சாட்டு இது

கொழும்பு, செப். 20

தாமரைக் கோபுரத் திட்டத்துக்காக முதலிட்ட பணத்தில் 200 கோடி ரூபாவைத் தவறான நிறுவனம் ஒன்றுக்கு வழங்கியதாக ஜனாதிபதி தெரிவித்தமை தவறானது என்றால், புள்ளி விவரங்களை அவருக்கு வழங்கிய அதிகாரிகளே குற்றம் சாட்டப்பட வேண்டியவர்கள் என ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் மஹிந்த அமரவீர



தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

முதலீட்டில் ஏதேனும் முறைகேடு நடந்திருக்கிறதா என்று ஜனாதிபதி சிறிசேன தனிப்பட்ட முறையில் விசாரிக்கவில்லை. அதிகாரிகள் வழங்கிய தகவல்களின் அடிப்படையிலேயே கூறினார்.

ஜனாதிபதி தனது கூற்று தவறா என்று உறுதியாக விசாரிக்கிறார். சீன தூதரகம் மற்றும் தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு ஆகியவற்றின் விளக்கங்கள் வெளிவரும் வரை நாங்கள் காத்திருக்க வேண்டும் – என்றார். (ஐ)

## தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு தேர்தல் ஆணைக்குழு அழைப்பு

கொழும்பு, செப். 20

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் தெளிவூட்டுவதற்காக தமது அதிகாரிகளுக்குத் தேர்தல்கள் ஆணைக்குழு அழைப்பு விடுத்துள்ளது.

மாவட்டத் தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர்கள், பிரதி மற்றும் உதவி தேர்தல்கள் ஆணையாளர்கள் ஆகியோருக்கே அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

தேர்தல் ஆணைக்குழுவுக்கு இன்று முற்பகல் 10 மணிக்கு வருகை தருமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக மேலதிக தேர்தல் ஆணையாளர் ரசிக பீரிஸ் தெரிவித்தார். (ஐ)






# தீர்வு இன்றேல் தீக்குளிப்போம்!

## வேலையில்லாப் பட்டதாரிகள் முல்லைத்தீவில் போராட்டம்



முல்லைத்தீவு, செப். 20

முல்லைத்தீவு மாவட்டத்தில் அரச வேலை வாய்ப்புகளில் புறக்கணிக்கப்பட்ட வேலையற்ற பட்டதாரிகள் சிலர் நேற்றுக் காலை முதல் மழைக்கு மத்தியிலும் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்துக்கு முன்பாக உண்ணா விரதப்போராட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளனர்.

தமக்கு 48 மணிநேரத்துக்குள் தீர்வு கிடைக்காவிடின் தீக்குளிப்போம் என்றும் அவர் கள் எச்சரித்துள்ளனர்.

இதுவரை வேலைவாய்ப்புகள் கிடைக்காதவர்களும் வெளிவாரிப் பட்டங்களைப் பெற்ற சிலரும் இந்தப் போராட்டத்தில் இணைந்துள்ளனர்.

தமது போராட்டத்துக்கு 48 மணித்தியாலத்துக்குள் நிரந்தரத் தீர்வு கிடைக்காத பட்சத்தில் தீக்குளிப்போம் என்று பதாகைகளை தாங்கியவாறு அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்

இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு ஆதரவாக வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன் மற்றும் கரைதுறைப்பற்றுப் பிரதேச சபை உறுப்பினர்களான சின்னராசா லோகேஸ்வரன், திருச்செல்வம் ரவீந்திரன், ரத்தினம் ஜெகதீஸ்வரன், அன்டனி ரங்க துசார, காமினி திசாநாயக்க உள்ளிட்ட அரசியல் பிரமுகர்களும் கலந்துகொண்டனர். (ஐ)

# இலங்கையின் வளர்ச்சிக்கு பிரிட்டன் துணை நிற்கும்!

## மகாநாயக்கர்களிடம் தூதுவர் உறுதி

கொழும்பு, செப். 20

இலங்கையின் வளர்ச்சிக்குப் பிரிட்டன் என்றுமே துணை நிற்கும் என பிரிட்டன் தூதுவர் சாரா ஹல்டன் மகாநாயக்க தேரரிடம் உறுதியளித்துள்ளார்.

நேற்று மல்வத்து மஹா விகாரையில் சங்கைக்குரிய திப்பட்டுவாவே ஸ்ரீ சுமங்கல தேரரை பிரிட்டன் தூதுவர் சாரா ஹல்டன் சந்தித்தார்.

இதேவேளை, அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்க தேரர் சங்கைக்குரிய வரக்காகொட ஞானரத்ன நாயக்க தேரரையும் அவர் சந்தித்து ஆசி பெற்றார்.

இந்தச் சந்திப்பின்போது பிரிட்டன் மற்றும் இலங்கைக்கு இடையிலான உறவை வலுப்படுத்த தனது நம்பிக்கையை வெளிப்படுத்தியதோடு, இலங்கையின் வளர்ச்சிக்கு தனது நாட்டின் ஆதரவையும் அவர் உறுதிப்படுத்தினார். (ஐ)



# கஞ்சா சுருட்டு தயாரித்த 14 பேர் கைது

கொழும்பு, செப். 20

கஞ்சா சுருட்டு தயாரித்து, அதனை விற்பனைச் செய்துவந்த தந்தை, மகன் உள்ளிட்ட 14 பேரை பேருவளை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்களிடமிருந்து, ஒரு தொகை கஞ்சா சுருட்டும், 3,500 மில்லி கிராம் கஞ்சாவும் கைப்பற்றப்பட்டுள்ளன என பொலிஸார் மேலும் கூறினர்.

அத்துடன், கஞ்சா பாவனைக்காக இவர்களால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த இடமொன்றையும் பொலிஸார் முற்றுகையிட்டுள்ளனர். (ஐ)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிரஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 20.09.2019 இல் வெளியிடப்பெற்றது.